# கோபுரம்

தகவல் இதழ்
சித்திரை '92




இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள வெளியீடு

## பொங்கல் விழா



கொட்டகலைத்திடலில் பொங்கல்விழா இறுதிநாள் நிகழ்ச்சிகளுக்கு சுற்றுலாத்துறை அமைச்சர் கௌரவ சௌ. தொண்டமான் அவர்கள் கலந்துகொண்டு உரைநிகழ்த்துவதையும் இராஜாங்க அமைச்சர் கௌரவ பி பி. தேவராஜ் நுவரெலியா பிரதேச சபைத் தலைவர் ஆர். இராதாகிருஷ்ணன் ஆகியோரையும் திரண்டிருந்த கூட்டத்தில் ஒரு பகுதியையும் படத்தில் காணலாம்.

## திருமலை விஜயம்




சில ஆண்டுகளுக்கு முன் காணாமற் போய், அமைச்சின் உதவியோடு மீளப்பெறப்பட்ட திருமலை 10ம் குறிச்சி, சீராளம்மன் ஆலய விக்கிரகங்களை, இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் திருமலை விஜயத்தின் போது ஆலய அறங்காவலர்களிடம் கையளித்த போது பிடிக்கப்பட்ட படம். படத்தில் அமைச்சருடன் வட-கிழக்கு மாகாண ஆளுநர். லெப். ஜெனரல் நளின் செனவிரட்ன, அமைச்சின் செயலாளர் திரு. த. வாமதேவன், அறங்காவலர் சபையினர் ஆகியோர் காணப்படுகின்றனர்.

# கோபுரம்

இந்து சமய, கலாசார திணைக்கள வெளியீடு

மலர்: 3 ★ ஆங்கீரச வருடம், சித்திரை மாதம் 1992 ★ இதழ் : 1

## எ ண் ண ம்

இவ்வாண்டு தொடங்கியபோதே, கொட்டகலையில் கோலாகலப் பொங்கல் விழா, பின்னர் தியாகராஜ ஆராதனை, தமிழிசை அரங்கு, சொற்பொழிவுகள் என பல்வேறு செயற்பாடுகள் நிகழ்ந்தேறின.

இவை அனைத்துக்கும் மகுடமிட்டாற்போல், மே மாத முதல்வாரத்தில் தேசிய தமிழ் சாகித்திய விழா, கொழும்பில் விமரிசையாக நடைபெறவுள்ளது. இலங்கைக் குடியரசின் மேதகு ஜனாதிபதி அவர்கள் விழாவைத் தொடக்கிவைக்கவுள்ளமையும், மாண்புமிகு பிரதமர் அவர்கள் இறுதிநாள் இலக்கியகர்த்தாக்களுக்கு விருதுகள் வழங்கவுள்ளமையும், பெருமிதத்திற்குரிய விடயங்களாகும்.

இம்முறை சாகித்திய விழாவின் சிறப்பம்சம் சர்வதேச மொழிக்கருத்தரங்கொன்று நடைபெறுவதாகும். மொழியியற் துறையில் துறைபோன பல தமிழறிஞர்கள் கலந்துகொண்டு ஆய்வுரைகளை வழங்கவுள்ளனர். சிங்கப்பூர், மலேஷியா, தமிழக இலங்கை அறிஞர்கள் ஒன்றிணைவது சாகித்திய விழாவுக்கு மேலும் பெருமை சேர்க்கின்றது. அத்துடன், நூற் கண்காட்சி, இலக்கிய அமர்வுகள், கலைநிகழ்ச்சிகள், விழா மலர், சிறப்புச் சொற்பொழிவுகள் என நான்கு தினங்களும் கொழும்பிலே தமிழ்மணம் கமழப் போகிறது.

இலக்கிய கர்த்தாக்களுக்கு விருது வழங்கும் விழா என்பதை விடவும் அன்னை மொழியாம் தமிழின் பெயரால் நாம் ஒன்றுபடுகிறோம் என்ற எண்ணம் எமக்கு உவகை தருகிறது. ஆதலின் இது தமிழ்விழா - தமிழ்பேசும் நெஞ்சங்கள் எங்கு வாழ்ந்தாலும் இன்பம் பரப்புகின்ற திருவிழா.

இவ்வாண்டு சாகித்திய விழா எமது கலை, இலக்கிய முயற்சிகளுக்கும் வளர்ச்சிக்கும் கட்டியம் கூறுகின்ற விழாவாக அமையும் என்பதே எமது எண்ணம்; பிரார்த்தனை.

பிறக்கின்ற தமிழ்ப் புத்தாண்டாம் 'ஆங்கீரச' கோபுரம் வாசகர்களுக்கு எல்லா நலன்களையும் நிறைவையும் அளிக்க வேண்டும் என இறைஞ்சுகின்றோம்.

★ கோபுரம் இதழ் பற்றிய உங்கள் கருத்துக்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்.

முகவரி :— பணிப்பாளர்,
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்
''காப்புறுதி இல்லம்'' 9ம் மாடி, 21, வோக்ஷோல் வீதி, கொழும்பு-02.

# திணைக்களச் செய்திகள்

## இசைக் கல்லூரி பரீட்சையும் அநுமதியும்

மட்டக்களப்பு விபுலாநந்த இசை நடனக் கல்லூரியின் 4ஆம் ஆண்டு மாண வர்களுக்கான இறுதிப் பரீட்சை கடந்த டிசம்பர் மாதம் 12ஆம் திகதி திணைக் களத்தில் நடைபெற்றது. அத்துடன் புதிய மாணவர்களை அநுமதிப்பதற்கான போட் டிப் பரீட்சை பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி நடைபெற்றது. தெரிவானோருக் கான நாலாண்டுக் கற்கைநெறி மார்ச் 5ஆம் திகதி ஆரம்பமானது.

## விபுலாநந்தர் நூற்றாண்டும், யாழ்நூலும்

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலா நந்த அடிகளாரின் நூற்றாண்டினை ஒட்டி நாடளாவிய ரீதியில் பல்வேறு செயற் பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. திணைக்களம் விபுலாநந்தர் பணிகள் தொடர்பான அறிஞர்களின் கட்டுரைகள் அடங்கிய மலர் ஒன்றினை வெளியிடுவதற் கான முன்னேற்பாடுகளை மேற்கொண் டுள்ளது. நூற்றாண்டினை ஒட்டி தமிழ கத்திலிருந்து இருபது யாழ்நூல் பிரதி களை திணைக்களம் விற்பனைக்காக வரு வித்துள்ளது. இவை, இலங்கையில் தமிழ் நூலகங்களுக்கும் ஆர்வமுள்ள தனிப்பட் டோருக்கும் விற்பனை செய்யப்பட்டுவரு கின்றன.

## ஜனாதிபதி இடம்பெயர் சேவை - களுத்துறை

ஜனவரி 17, 18, 19ஆம் திகதிகளில் நடைபெற்ற களுத்துறை மாவட்ட ஜனாதி பதி இடம்பெயர் சேவைக்கு முன்னோடி யாக இந்துசமய, கலாசார இராஜாங்க அமைச்சின் இடம்பெயர் செயலகம் ஜனவரி 5ஆம் திகதி மத்துகம சென். மேரிஸ் வித்தி யாலய மண்டபத்தில் நடைபெற்றது. இராஜாங்க அமைச்சர் திரு. பி. பி. தேவ ராஜ், அமைச்சின் செயலாளர் திரு. க. வாமதேவன் இந்துசமயத் திணைக்களப் பணிப்பாளர் திரு. க. சண்முகலிங்கம், உதவிப்பணிப்பாளர்களான, திரு. வீ விக் கிரமராஜா, ஜனாப் ஏ. எம். நஹியா, ஆகியோருட்பட திணைக்கள அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

களுத்துறை, மத்துகம, புளத்சிங்கள, இங்கிரிய, அகலவத்தை, பதுரலிய ஆகிய பகுதிகளில் வாழும் இந்து மக்களின் பிரச் சினைகள் கவனத்திற்கொள்ளப்பட்டன. பல அறநெறிப்பாடசாலைகளும், இந்து மன்றங்களும் அன்று பதிவு செய்யப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சிலம்பொலியின் சொற்பொழிவுகள்

தமிழறிஞர் சிலம்பொலி செல்லப் பனின் மூன்று சொற்பொழிவுகள், திணைக் களக் கேட்போர் கூடத்தில் பெப்ரவரி 5, 6, 7ஆம் திகதிகளில் இடம்பெற்றன. பெப்ர வரி 5ஆம் திகதி 'கம்பன்கவி அமுதம்' எனும் தலைப்பிலும், 6ஆம் திகதி 'சிந் தைக்கினிய சிலம்பு' எனும் தலைப்பிலும், 7ஆம் திகதி 'தமிழ் உறவு' எனும் தலைப் பிலும் திரு. செல்லப்பன் உரை நிகழ்த் தினார்.

## அமைச்சர், அதிகாரிகளின் திருமலை விஜயம்

முதற்தடவையாக மூன்று நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு, இராஜாங்க அமைச்சர் பி. பி தேவ ராஜ் அவர்கள், அமைச்சு அதிகாரி களுடன், ஜனவரி 9ம் திகதி திருமலை சென்றிருந்தார். இவ்விஜயம் பிரதேச சமய கலாசாரத் தொடர்புகளை வலுப்படுத்த உதவியது.

அமைச்சர் தமது விஜயத்தின் போது கோணேசர் ஆலயம், பத் திரகாளியம்மன் ஆலயம், தட்சண கான சபா, இராமகிருஷ்ண மிஷன் இந்துக்கல்லூரி, அன்பு இல்லம், நகராட்சி மன்ற நூலகம், இந்து இளைஞர் பேரவை போன்றபச்சிடங் களிலும் நடைபெற்ற நிகழ்சுகளில் கலந்து கொண்டார். ஜனவரி 11-ம் திகதி காலை சிவயோக சமாஜத்தில் சுவாமி கங்காதரானந்தாவின் வஜனா மிர்தம் ஆங்கில நூலை அமைச்சர் வெளியிட்டு வைத்தார்.

இவ்விஜயத்தின் போது அமைச்சர் அவர்களுடன், அமைச்சின் செய லாளர் திரு. த. வாமதேவன், திணைக்களப்பணிப்பாளர் திரு. க. சண்முகலிங்கம், உதவிப்பணிப்பாளர் திரு. குமார்வடிவேல் கலாசார அலு வலகர், திரு. என். தியாகராஜா தகவல் அலுவலர் திரு. ம. சண்முக நாதன் ஆகியோர் கலந்து கொண் டனர். இவ்விஜயத்துக்கான ஏற்பாடு களை வடகிழக்கு மாகாண கல்வி, விளையாட்டுத்துறை அமைச்சின் முன் னாள் செயலாளரும், இந்நாள் வவு னியா அரச அதிபருமான திரு. தில்லை நடராசா அவர்கள் மேற்கொண்டிருந் தார். அமைச்சர் கலந்து கொண்ட நிகழ்ச்சிகளில், வடகிழக்கு மாகாண ஆளுநர் லெப்டினன்ட் ஜெனரல் நளின் செனவிரத்ன, திருமலை மாவட்ட அரச அதிபர் வி. கொடவெல ஆகி யோரும் கலந்து கொண்டமை குறிப் பிடத்தக்கது.

இராஜாங்க அமைச்சர் பி. பீ. தேவ ராஜ் இச்சொற்பொழிவுகளுக்கு பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். அமைச் சின் செயலாளர் திரு. த. வாமதேவன் போன்னாடைபோர்த்தி திரு. செல்லப் பனை கௌரவித்தார். திணைக்களப் பணிப்பாளர் திரு. க. சண்முகலிங்கம், பிரதிப்பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக் கரசன், உதவிப்பணிப்பாளர், திரு. வீ. விக் கிரமராஜா, திரு. குமார் வடிவேல், ஜனாப் ஏ. எம். நஹியா ஆகியோரும் கலந்துகொண்டனர் திரளான தமிழ் ஆர்வலர்களும், இலக்கிய ரசிகர்களும் இச்சொற்பொழிவுகளுக்கு கூடியிருந்தனர்.

## சத்குரு ஸ்ரீ தியாகராஜ ஆராதனை

சங்கீத மும்மூர்த்திகளுள் ஒருவரான சத்குரு ஸ்ரீ தியாகராஜருக்கான இசை ஆரா தனை நிகழ்ச்சி, ஜனவரிமாதம் 24ஆம் திகதி மாலை 5 மணிக்கு ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய மண்ட பத்தில் நடைபெற்றது.

மூன்றாவது தடவையாக மிகச் சிறப் பாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இவ்வாரா தனையை, இந்து கலாசார இராஜாங்க அமைச்சின் அநுசரணையோடு, ஜிந்துப் பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய ஆலயம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தமிழ்ச் சேவை என்பன இணைந்து ஒழுங்கு செய்திருந்தன.

நாட்டின் பல பாகங்களையும் சேர்ந்த கர்நாடக இசைக்கலைஞர்களும், வாத்தி யக் கலைஞர்களும் ஒன்றிணைந்து பஞ்ச ரத்தின கீர்த்தனைகளையும், ஏனைய கீர்த் தனைகளையும் இசைத்து தியாகப்பிரும் மத்துக்கு தமது பக்தியைச் செலுத்திக் கொண்டனர். இந்நிகழ்ச்சியை இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபன தமிழ்ச்சேவை நேரடியாக அஞ்சல் செய்தது. இவ்வாரா

தனை நிகழ்ச்சிக்கு கொழும்பு மாநகர முதல்வர் ரட்னசிறி ராஜபக்ச சிறப்பு விருந்தினராகவும் இராஜாங்க அமைச்சர் பீ.பீ. தேவராஜ் அவர்கள் பிரதம அதிதியாகவும் கலந்துகொண்ட இவ்வாராதனையின் போது அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் திருமதிகீதா நித்தியானந்தன், திணைக்கள பிரதிப்பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன், உதவிப்பணிப்பாளர் திரு. வீ. விக்கிரமராஜா ஆகியோர் உட்பட திணைக்கள உத்தியோகத்தர்கள் பலரும் நிகழ்ச்சி ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தனர்.

## டாக்டர் நிர்மலா கஜாரியா சொற்பொழிவு

பிரம்மகுமாரிகள் ராஜயோக உலக ஆன்மீகப் பல்கலைக்கழகத்தின் தெற்காசியப்பிரிவின் பணிப்பாளர் திருமதி நிர்மலா கஜாரியா ஜனவரி 24ஆம் திகதி மாலை 'பழைமையும் புதுமையும் — சமுதாய மாற்றங்கள் தரும் சவால்' எனும் தலைப்

## தேசிய பொங்கல்விழா- கலாசார வாரம்

ஜனவரி 16, 17, 18. 19ம் திகதிகளை, பொங்கலுடன் இணைந்த கலாசார வாரமாக இந்து கலாசார இராஜாங்க அமைச்சு பிரகடனப்படுத்தியிருந்தது. இவ்வாண்டு அமைச்சின் அநுசரணையோடு, நுவரெலிய பிரதேச சபை பொங்கல்விழாவை நான்கு தினங்களும், கொட்டகலை விளையாட்டுத்திடலில் வெகு கோலாகலமாகக் கொண்டாடியது.

கோலப்போட்டி, சைக்கிள், மரதன், கரப்பந்தாட்டம், உதைபந்தாட்டம், வலைப்பந்தாட்டம் ஆகிய போட்டிகள் பல மட்டங்களில் நிகழ்ந்தன. பிரதேசபாடசாலைகள், இளைஞர் மன்றங்கள் என்பன போட்டிகளில் கலந்துகொண்டன. காய்கறிக் கண்காட்சி, கால்நடைக் கண்காட்சி என்பனவும் நடைபெற்றன.

குறித்த நான்கு தினங்களும், மாலைநேரங்களில் விசேட இசை நிகழ்ச்சிகளும், கும்மி, காவடி, கரகம் போன்ற நாட்டுக்கலைகளும் சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன, இந்நிகழ்ச்சிகளுக்கு பல அமைச்சர்களும், பிரதேச பாராளுமன்ற உறுப்பினர்களும், பிரதேச சபை, நகரசபை உறுப்பினர்களும் கலந்து சிறப்பித்தனர்.

இறுதிநாள் 19ம் திகதி நிகழ்ச்சிகளுக்கு இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினர்களாக சபாநாயகர் கௌரவ எம். எச். முகம்மத், சுற்றுலாத்துறை அமைச்சர் கௌரவ எஸ். தொண்டமான், மத்தியமாகாண முதலமைச்சர் டபிள்யூ. பி. பீ. திசாநாயக்க, சுகாதார மகளிர் விவகார அமைச்சர் கௌரவ ரேணுகா ஹேரத் மின்சக்தி எரிபொருட்துறை அமைச்சர் கௌரவ சந்திரா பண்டார. நுவரெலிய பிரதேச சபைதலைவர் வீ இராதாகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அன்றைய சிறப்புநிகழ்ச்சியாக தமிழக இசைக்கலைஞர்களான, சுரேந்தர் சசிரேகா குழுவினரின் இசைநிகழ்ச்சியும் இடம் பெற்றது. பல்லாயிரக் கணக்கான மக்கள், கொட்டகலைத்திடலில் ஒன்றிணைந்து பொங்கல் விழாவை கொண்டாடிக் களித்தனர். இவ்வாண்டுப் பொங்கல் தேசியப் பெருவிழாவாக அமைந்தது அமைச்சுமுயற்சிகளின் பெருவெற்றி எனக் கூற வேண்டும்.

பில் திணைக்களக் கேட்போர் கூடத்தில் உரை நிகழ்த்தினார்.

திருமதி சஜாரியா கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக நியூசிலாந்து, அவுஸ்திரேலியா மற்றும், தெற்காசிய நாடுகளில், ராஜயோக நிலையப்பணிப்பாளராக இருந்து விரிவுரைகளை ஆற்றி வருபவர் ஆவார். இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட இந்நிகழ்ச்சியின்போது, செயலாளர் திரு. த. வாமதேவன் திணைக்களப் பணிப்பாளர் திரு. க. சண்முகலிங்கம், உதவிப்பணிப்பாளர், திரு. குமார் வடிவேல், இலங்கை, பிரம்மகுமாரிகள் ராஜயோக நிலையப்பொறுப்பாளர் சகோதரி ஜானகி ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

## கலாநிதி மக்டோவல் சொற்பொழிவு

பெப்ரவரி மாதம் 14ஆம் திகதி, திணைக்களம் நடாத்தும் இந்துப் பேருரைத் தொடரில், 'தென்னாசிய உரோம வர்த்தகத் தொடர்புகளும், அதன் பாதிப்புகளும்—ஒரு கண்ணோட்டம்' எனும் தலைப்பில் கலாநிதி டேவிட் மக்டோவல் உரை நிகழ்த்தினார். இந்நிகழ்ச்சிக்கு இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் தலைமை வகித்தார். டாக்டர் மெக்டோவல் ஐக்கிய இராச்சியத்தின் தென்னாசிய ஆய்வுக் கழகத் தலைவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சிவராத்திரி விழா

இம்முறை மார்ச் மாதம் 2ஆம் திகதி வட கொழும்பு, இந்து பரிபாலன சங்கம், இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபன தமிழ்ச் சேவை ஆகியவற்றுடன் இணைந்து திணைக்களம், சிவராத்திரி விழாவை முகத்துவாரம் ஸ்ரீமத் அருணாசலேஸ்வரர் ஆலயத்தில் கொண்டாடியது.

விழாவில், பிரபல இசைக் கலைஞர்களின் இசைக் கச்சேரிகள், பக்திப்பாடல்கள், மாணவர்களின் திருமுறைப் பாராயணம், சமயச் சொற்பொழிவுகள், வில்லுப்பாட்டு என்பன இடம்பெற்றன.

இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட இவ்வைபவத்தில். திணைக்களப் பணிப்பாளர் திரு. க. சண்முகலிங்கம், பிரதிப்பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன், உதவிப்பணிப்பாளர் திரு. குமார்

## சிலம்பொலியுடன் அறிஞர் கலந்துரையாடல்

தமிழக அறிஞர் சிலம்பொலி செல்லப்பன் அவர்களுடன், இலங்கைத் தமிழறிஞர்களின கலந்துரையாடல் நிகழ்ச்சியொன்று பெப்ரவரி 6ம் திகதி காலை திணைக்களக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட இக்கலந்துரையாடலின் போது, பேராசிரியர் கா. சிவத்தம்பி பேராசிரியர் எம். எம். உவைஸ், தினகரன் பிரதம ஆசிரியர் திரு. ஆர். சிவகுருநாதன் பிரபல எழுத்தாளர் அம்பிகைபாகன், அமைச்சின் செயலாளர் திரு. த. வாமதேவன், திணைக்களப்பணிப்பாளர் திரு. க. சண்முகலிங்கம், பிரதிப்பணிப்பாளர், திருமதி சாந்தி நாவுக்கரசன், உதவிப்பணிப்பாளர்கள் ஜனாப். ஏ. எம். நஹியா, திரு. குமார் வடிவேல் ஆகியோர் உட்பட பல அறிஞர்களும் கலந்துகொண்டு, இன்றைய, தமிழ் ஆய்வு முயற்சிகள், தமிழாராய்ச்சி மாநாடு, தமிழகத்தொடர்புகள், அனைத்துலகத் தமிழ் உறவு போன்ற பல விடயங்கள் பற்றியும் கலந்துரையாடினர்.

## சிலம்பொலி செல்லப்பனின் இலக்கிய விஜயம்

முன்னாள் இந்திய தமிழ் வளர்ச்சிக் சழகத் தலைவரும் தமிழ் ஆராய்ச்சிக்கான சர்வதேசத் தவிசாளரும், தஞ்சைப் பல்கலைக்கழக முன்னாள் பதிவாளருமான தமிழறிஞர் டாக்டர் சிலம்பொலி சு. செல்லப்பன, இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்களின அழைப்பின்பேரில் கடந்த ஜனவரி மாதம் 22ம் திகதி இலங்கை வந்திருந்தார்.

இரண்டு வாரங்கள் இலங்கையில் தங்கியிருந்த அவர் கொழும்பில் பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி, தமிழ்ச் சங்கம், ஸாஹிராக் கல்லூரி, ஜிந்துப்பிட்டி முருகன் கோயில், விவேகானந்தா சபை, இராமகிருஷ்ண மிஷன், விவேகானந்த மகாவித்தியாலயம், இந்து அமைச்சின் கேட்போர் கூடம போன்ற பல இடங்களிலும், சமய, இலக்கியச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்.

அத்துடன், உடப்பு, குருநாகல் கண்டி, ரத்தொட்டை, மாத்தளை, அட்டன், நுவரெலியா, அப்புத்தளை, பண்டாரவளை ஆகிய இடங்களுக்கும் விஜயம் செய்து பல இலக்கிய உரைகளை ஆற்றினார்,

திரு. செல்லப்பன் சிலப்பதிகாரத்தில் கொண்டுள்ள ஈடுபாடு காரணமாக சொல்லின் செல்வர் இரா. பி. சேதுப்பிள்ளை அவர்களினால் 'சிலம்பொலி' எனப் பட்டமளிக்கப் பட்டவர். அவ்வாறே, சீறாப்புராணம், பெருங்கதை, நாலடியார் பாரதிதாசன் கவிதைகள், புதுக் கவிதைகள், போன்ற பல இலக்கியங்களிலும் ஆழ்ந்த பரிச்சயம் மிக்கவர்.

கல்வி, சட்டம், நிர்வாகம் ஆகிய துறைகளில் பணியாற்றியுள்ள இவர், இருபதுக்கும் மேற்பட்ட அருந்தமிழ் நூல்களை ஆக்கியுள்ள பெருமைக்குரியவர் ஆவார்.

வடிவேல் ஆகியோர் உட்பட திணைக்கள உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

## ஸ்ரீமத் கங்காதரானந்தா குருபூசை

திருமலை, சிவயோக சமாஜ ஸ்தாபகர் ஸ்ரீமத் சுவாமி கங்காதரானந்தாஜி மஹராஜின் முதலாண்டு குருபூஜையை ஒட்டிய விசேட கூட்டம் மார்ச் 7ஆம் திகதி மாலை திணைக்களத்தால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

திணைக்களப் பிரதிப்பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் அவர்களின் தேவாரத்துடன் தொடங்கிய இக்கூட்டத்திற்கு மேல்மாகாண ஆளுநர் எஸ். சர்வானந்தா அவர்கள் தலைமை தாங்கினார்.

வட - கிழக்கு மாகாண முன்னாள் செயலாளர் திரு. வே. ந. சிவராஜா அவர்களின் வரவேற்புரையைத் தொடர்ந்து திரு. சர்வானந்தா அவர்கள் உரை நிகழ்த்தினார்.

தொடர்ந்து 'நவீன உலகிற்கு ஆன்மீகக் கல்வியின் முக்கியத்துவம்' என்ற தலைப்பில் செல்வி ராதிகா குமாரசாமி கங்காதரானந்தா நினைவுச் சொற்பொழிவினை நிகழ்த்தினார்.

சுவாமிஜி அவர்களின் ஆன்மீக அநுபவங்கள் பற்றி ஸ்ரீமத் சுவாமி உமா சங்கரானந்த சரஸ்வதி அவர்கள் தமிழிலும், சுவாமிஜி அவர்களின் பிரதம சீடர், ஸ்ரீமத் சுவாமி ஜெகதீஸ்வரானந்தா அவர்கள் ஆங்கிலத்திலும் உரை நிகழ்த்தினர்.

இராஜாங்க அமைச்சின் முன்னாள் செயலாளர் திரு. சிவா ஸ்ரீ மாணிக்கவாசகர், திணைக்கள உதவிப்பணிப்பாளர்கள், திரு. வீ. விக்கிரமராஜா, திரு. குமார் வடிவேல் ஆகியோரோடு பெருந்திரளான சிவயோக சமாஜத் தொண்டர்களும் இக்கூட்டத்திற் கலந்து சிறப்பித்தனர்.

செல்வி சஹஜா எம். டிவுல்வெவ அவர்களின் நன்றியுரையுடன் நிறைவு பெற்ற இக்கூட்டத்தில் சுவாமிஜி அவர்களின் 'பஜனாமிர்தம்' ஆங்கில நூலும் அனைவருக்கும் விநியோகிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## நவநீதகிருஷ்ணன் தம்பதியினரின் விளக்கவுரை

நாட்டார் இலக்கிய விற்பன்னர்களான டாக்டர் மா. நவநீதகிருஷ்ணன், திருமதி விஜயலட்சுமி நவநீதகிருஷ்ணன் தம்பதி

## புத்தகக் கழகம்

தமிழ் வாசகர்கள் மத்தியில் தரமான ரசனையை உருவாக்குவதையும், புதிய இலக்கியங்களையும், இலக்கிய அநுபவங்களையும் அறிமுகப்படுத்துவதையும் நோக்கமாகக்கொண்டு பெப்ரவரி மாதம் 18ம் திகதி இந்துசமயக் கேட்போர் கூடத்தில் புத்தகக் கழகம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது. இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் கழகத்தைத் தொடக்கி வைத்து உரை நிகழ்த்துகையில் கழகம், எதிர் காலத்தில், இலங்கையின் தமிழ்நூல் வெளியீட்டிலும் இலக்கிய உலகிலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

விழாவின்போது இடம்பெற்ற நிகழ்ச்சியில் வித்துவான், க. ந. வேலன், பிரம்ம ஸ்ரீ காந்தன் குருக்கள், ம. சண்முகநாதன் ஆகியோரின் கவிதா நிகழ்வு இடம்பெற்றது. மேமன்கவி, 'ஐம்பதுக்குப்பின் தமிழ்க்கவிதை' எனும் தலைப்பில் உரைநிகழ்த்தினார். நிகழ்ச்சியின்போது தற்காலத் தமிழ்க்கவிதை நூல்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. புத்தகக்கழகத்தின் நோக்கம், பயன்கள் பற்றி பிரேம்ஜி ஞானசுந்தரன் விளக்கவுரை நிகழ்த்தினார்.

கழகத்தின் இரண்டாவது நிகழ்ச்சி, மார்ச் மாதம் 25ம் திகதி இராஜாங்க அமைச்சர், பி. பி. தேவராஜ் அவர்கள் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்ச்சியில் கலாநிதி வித்துவான் க. ந. வேலன் அவர்கள் ''கண்ணகி சிந்தாத கண்ணீர்'' எனும் தலைப்பில் இலக்கிய உரை நிகழ்த்தினார்.

அன்று, தமிழகத்திலிருந்தும், மேற்கு நாடுகளிலிருந்தும் வெளிவரும் தமிழ் இலக்கிய சஞ்சிகைகள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. கழகத்தின் செய்திகளைத் தாங்கிவரும் 'செய்தி மடலும்' அன்று வெளியிடப்பட்டது.

புத்தகக் கழகத்தை ஒரு இலக்கிய நிறுவனமாக வளர்த்துவிட வேண்டுமென்பதை அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்கள் வலியுறுத்தி வருகின்றார். அமைச்சர் அவர்களின் எண்ணத்தின் பின்னணியில், அதனைச் செயல்வடிவம் பெறச்செய்து வழிப்படுத்துபவராக திணைக்களப்பணிப்பாளர் திரு. க. சண்முகலிங்கம் அவர்களும் கழகத்தின் அமைப்பாளராகக் கடமை செய்யும் நிர்வாக உத்தியோகத்தர் திரு. நா. சோமகாந்தன் (ஈழத்துச் சோமு) அவர்களும் முன்னின்று உழைக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

யினர் தமது குழுவினருடன் மார்ச் 12ஆம் திகதி திணைக்களக் கேட்போர் கூடத்தில் காலையிலும், மாலையிலும், 'தென்னிந்திய இசை, நடன, நாட்டாரியல் மரபு' பற்றிய செயல்முறை விளக்கம் அளித்தனர். இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட இந்நிகழ்ச்சியை கொழும்பு பல்கலைக்கழக சமூக விஞ்ஞானத்துறைத் தலைவர் பேராசிரியர், சோ. சந்திரசேகரன் நெறிப்படுத்தினார். அமைச்சின் செயலாளர் திரு. த. வாமதேவன், திணைக்களப் பணிப்பாளர் திரு. க. சண்முகலிங்கம் பிரதிப் பணிப்பாளர் திருமதி. சாந்தி நாவுக்கரசன் அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் திருமதி.கீதா நித்தியானந்தன் ஆகியோரும் ஏனைய அதிகாரிகளும் நிகழ்ச்சியிற் கலந்து கொண்டனர்.

மாலையில் நடைபெற்ற விளக்கத்தின் போது சிங்களக் கலைஞர்களும் கலந்து கொண்டு, 'நாட்டாரியல் மரபு' தொடர்பான பல விளக்கங்களை நவநீதகிருஷ்ணன் தம்பதியிடம் அறிந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## நான்காவது தமிழிசை அரங்கு

தமிழிசைக்குப் புதுப் பொலிவூட்டும் தமிழிசை அரங்குத்தொடரின் நான்காவது அரங்கு, நால்வர் நற்றமிழ் விழாவாக மார்ச் மாதம் 18ஆம் திகதி மாலை வெள்ளவத்தை இராமகிருஷ்ண மண்டபத்தில் நடைபெற்றது. இந்துசமய கலாசார இராஜாங்க அமைச்சு, இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபன தமிழ்ச் சேவையுடன் இணைந்து இதனை ஒழுங்கு செய்திருந்தது.

இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு தொடக்கவுரை நிகழ்த்தினார்.

செல்வி சியாமளா கணேஸ்வரனின் தேவாரத்தைத் தொடர்ந்து, 'நால்வர் நற்றமிழும் பண்ணும்' எனும் தலைப்பில் திரு. சி. குமாரசாமி அவர்களின் உரை இடம்பெற்றது. தொடர்ந்து சம்பந்தர், அப்பர், சுந்தரர், மணிவாசகர் பாடல்களை, பண்ணிசைப்பாவலர்களான திரு: வை. பழனிநான், திரு. வை. கணேசலிங்கம் திரு. பி.வி. இராமன், திரு. தி. மாணிக்க வாசகர் ஆகியோர் இசைத்தனர்.

அடுத்து, நால்வர் பாடல்களுக்கு பரத கலாநிதி சிவானந்தி ஹரிதர்சன் அவர்களின் மாணவியர் நடனமாடினர்.

இந்நிகழ்ச்சியின்போது, அமைச்சின் செயலாளர் திரு. த. வாமதேவன், திணைக்களப்பணிப்பாளர் திரு. க. சண்முகலிங்கம், அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் திருமதி. கீதா நித்தியானந்தன், பிரதிப்பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன், உதவிப்பணிப்பாளர் திரு. குமார் வடிவேல் ஆகியோருட்பட திணைக்கள உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## ஜனாதிபதி இடம்பெயர் சேவை - வவுனியா

கலாசார தகவற்துறை அமைச்சின் நடமாடும் செயலகச்சேவை மார்ச் 28ஆம்

திகதி வவுனியா தமிழ் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்துகலாசார இராஜாங்க அமைச்சின் சார்பில் அமைச்சர் பி. பி. தேவராஜ், அவர்களும் செயலாளர் திரு. த. வாமதேவன், திணைக்களப்பணிப்பாளர் திரு. க. சண்முகலிங்கம், கலாசார அலுவலர் திரு. மார்த்தளை வடிவேலன் ஆகியோருடன் ஏனைய திணைக்கள உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

## பேராசிரியர் தில்லைநாதன் சொற்பொழிவு

மார்ச் 28ஆம் திகதி, திணைக்கள கேட்போர் கூடத்தில், விபுலாநந்த 'அடிகளாரின் மானிட நோக்கு' எனும் தலைப்பில், பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். தில்லைநாதன் நினைவுப் பேருரை நிகழ்த்தினார்.

பிரதேச அபிவிருத்தி அமைச்சின் முன்னாள் செயலாளரான செ. குணரத்தினம் இந்நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார். அமைச்சின் செயலாளர் திரு. த. வாமதேவன், திணைக்களப்பணிப்பாளர் திரு. க. சண்முகலிங்கம், உதவிப்பணிப்பாளர் ஜனாப் ஏ. எம். நஹியா ஆகியோருட்பட திணைக்கள உத்தியோகத்தர்களும், தமிழ் ஆர்வலர்களும் நிகழ்ச்சியிற் கலந்து சிறப்பித்தனர்.

## நவநீதகிருஷ்ணன் தம்பதியரும், குழுவினரும் அளித்த நாட்டார் இயல் நிகழ்ச்சிகள்

இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்களின் அழைப்பை ஏற்று மார்ச் மாதம் 6 ம் திகதி இலங்கை வந்திருந்த மதுரை காமராசர் பல்கலைக்கழக நாட்டுப்புறக் கலை மையத்தின் இணைப்பேராசிரியர்களான டாக்டர் மா. நவநீத கிருஷ்ணன், திருமதி விஜலட்சுமி நவநீதகிருஷ்ணன் தம்பதியர் தமது குழுவினருடன் இலங்கையில் பல நிகழ்ச்சிகளை நடாத்தினர்.

பண்டாரவளை, கண்டி, அட்டன், கொட்டகலை, நுவரெலிய, நீர்கொழும்பு ஆகிய இடங்களிலும், தலைநகர் கொழும்பிலும் இவர்கள் நடாத்திய நிகழ்ச்சிகள் பெரும் வரவேற்பைப் பெற்றன.

நாட்டார் வழக்கியலில் ஊறித் திளைத்துள்ள இத்தம்பதியினர், இலங்கையில் ஒரு குறிப்பிட்ட காலம் வந்து தங்கியிருந்து, இங்குள்ள பழைய நாட்டார் கூத்துகளையும், பாடல்களையும், ஆய்வு செய்யத் திட்டமிட்டுள்ளனர்.

கவிஞர் சி. அழகுப்பிள்ளை அவர்கள் தொகுத்து வைத்திருந்த மலையக நாட்டார் பாடல்கள் இத்தம்பதியினரால் பாடப்பட்டு ஒலிப்பதிவு நாடாவாக விரைவில் வெளியிடப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# அங்கும் இங்கும்

★ உலகில் இயங்கும், இராமகிருஷ்ண மிஷன் கிளைகளின் பொதுச் செயலாளரான ஸ்ரீமத்சுவாமி கஹனந்தாஜி மஹ ராஜ் ஜனவரி 13ம் திகதி இலங்கை வந்திருந்தார். மறுநாள் இராம கிருஷ்ண மண்டபத்தில், அகில இலங்கை இந்து காங்கிரஸ், இந்து கலாசார இராஜாங்க அமைச்சு என்பன சுவாமிக்கு பொது வரவேற்பளித்தன.

## யாழ்ப்பாணத்தில் கம்பன் விழா

பெப்ரவரி 14, 15, 16, 17 ம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் கம்பன்விழா வெகுகோலாகலமாகக் கொண்டாடப் பட்டது. காலை நிகழ்ச்சிகள், நாவலர் கலாசார மண்டபத்திலும், மாலை நிகழ்ச்சிகள், ஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்திலும் நடைபெற்றன.

நல்லை ஆதீனம், ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர பரமாசாரிய சுவாமிகள், அதி வண. தியோகுப்பிள்ளை, செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, பேராசிரியர் அ. துரைராஜா, கலாநிதி க. சிற்றம்பலம், புதுவை இரத்தின துரை, கலாநிதி இ. பாலசுந்தரம், வண. ஏ. கே. வி. சந்திரகாந் பேரா சிரியர் செ. சிவஞானசுந்தரம் ஆகியோரும் பல தமிழறிஞர்களும் இந் நான்கு தினங்களும் கலந்து கம்பன் விழாவைச் சிறப்பித்தனர்.

இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவ ராஜ், மேல்மாகாண ஆளுநர் சு. சர் வானந்தா, கொழும்பு மாநகர மேயர் இரட்னசிறி ராஜபக்ச அகில இலங்கை இந்துமா மன்றத் தலைவர் சு. வேலா யுதபிள்ளை ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர். பின்னர், சுவாமி சஹானந்தா அவர்களின் சிறப்புச் சொற் பொழிவும் இடம்பெற்றது.

★ இரத்தொட்டை, இந்துமகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட ஸ்ரீ பால முருகன் நூதனபிரதிஷ்டா கும்பாபி ஷேசம் ஜனவரி 20ம் திகதி இடம் பெற்றது. இராஜாங்க அமைச்சர் பி. பீ. தேவராஜ் விழாவிற் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

★ பிப்ரவரி 23 ம் திகதி முதல் 26 ம் திகதி வரை, சென்னை சங்கரதாஸ் சுவாமி கலையரங்கில் முதலாவது அனைத் துலகத் தெய்வத் தமிழ் மாநாடு நடை பெற்றது. இந்துசமயத் திணைக்களத் தின் சார்பில் பணிப்பாளர் திரு. க. சண்முகலிங்கம் அவர்களும் உதவிப் பணிப்பாளர் திரு. குமார் வடிவேல் அவர்களும் கலந்துகொண்டனர். தெய்வத்தமிழ் நூற்கண்காட்சி, அலங் கார ஊர்திகள் பேரணி, 'தெய்வத் தமிழ் கருவூலம், எனும் சிறப்புமலர் வெளியீடு, என்பன இடம்பெற்றன.

விழாவில் திருக்குறள் அரங்கு, தமி ழிசை அரங்கு, வைணவ அரங்கு,

சன்மார்க்க அரங்கு. வள்ளலார் அரங்கு, சைவ அரங்கு, என்பவற்றில் கருத்துரைகளும் கவி, இசை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

★ கொட்டகலையில் உள்ள நுவரெலிய பிரதேச சபைக் கட்டிடத்தில் ஜனவரி 8 ம் திகதி பிற்பகல் நுண்கலை நிலையத்தின் அங்குரார்ப்பண வைபவம் இடம்பெற்றது. இராஜாங்க அமைச்சர் பி பி. தேவராஜ் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி ஆத்மகனாநந்தா, நுவரெலியா பாராளுமன்ற உறுப்பினர் திரு. எம். சிவலிங்கம் நுவரெலிய பிரதேசசபைத் தலைவர் திரு. வி. இராதாகிருஷ்ணன், உபதலைவர் இரா. முத்துராமன், நடன ஆசிரியை திருமதி கௌரி கண்ணன் ஆகியோரும், இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

## சிங்களவர்கள் நடாத்திய தமிழ் இலக்கிய விழா

சிங்கள அன்பர்கள் இணைந்து முதன்முறையாக தமிழ் இலக்கிய விழாவொன்றை மார்ச் 3 ம் திகதி பொது நூல்நிலையக் கேட்போர் கூடத்தில் நடத்தினர். பேராசிரியர் சுனில் ஆரியரத்ன அவர்கள் எழுதிய ''தமிழ் இலக்கிய வரலாறு'', ''தமிழ் சிற்றிலக்கிய அகராதி'' ஆகிய நூல்கள் அன்று வெளியிடப்பட்டன.

பல சிங்களக் கலைஞர்கள் தமிழ்ப் பாடல்களை இசைத்தனர். வீணை, கடம் போன்றவற்றையும் இசைத்தனர். பிரதான சொற்பொழிவை பேராசிரியர் சுனில் ஆரியரத்ன ஆற்றினார். சிங்களவர்களே நிறைந்திருந்த மண்டபத்தில் தமிழ் மணம் கமழ்ந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

★ ஒன்பது ஆண்டுகளுக்குப் பின் கண்டி, கட்டுக்கலை ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலயத் தேர்த்திருவிழா மார்ச் 17 ம் திகதி நடைபெற்றது. 17ம் திகதி இரவு ஆரம்பமான பஞ்சரதபவனி மறுநாள் காலையே ஆலயத்தை வந்தடைந்தது. கண்டி நகரெங்கும் பிரதான வீதிகளில் வாழை, கமுகு, தென்னோலைத்தோரணங்கள் அமைக்கப்பட்டிருந்தன. கௌரவ அமைச்சர்கள் எஸ். தொண்டமான், பி. பி. தேவராஜ் எம். எஸ் செல்லசாமி ஆகியோரும் பல பிரமுகர்களும் இத்திருவிழாவிற் கலந்து கொண்டனர்.

★ ஸ்ரீமத் சுவாமி கங்காதரானந்தா அவர்களின் முதலாவது குருபூஜை மார்ச் மாதம் 5ம் திகதி காலை பம்பலப்பிட்டி ஸ்ரீ பிரான்ஸிஸ் மகாதேவா அவெனியூ திரு. எம். சற்குணநாதன் அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. பலாங்கொடை அம்மன் கோவில் பிரதமகுரு பிரம்மஸ்ரீ விசுவநாதக் குருக்கள் விசேடபூஜைவழிபாடுகளைஆற்றினார். இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ், திருமதி விஜயலட்சுமி தேவராஜ் அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் திருமதி கீதா நித்தியானந்தன் ஆகியோர் உட்பட சமாஜ அன்பர்கள் பலரும் குருபூசையிலும் பின்னர் இடம்பெற்ற அன்னதான வைபவங்களிலும் கலந்து சிறப்பித்தனர்.

★ ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரின் 157 வது ஜயந்தியை ஒட்டிய விசேட நிகழ்ச்சிகள் மார்ச் 29ம் திகதி வெள்ள வத்தை இராமகிருஷ்ண மண்டபத்தில் நடைபெற்றன. காலை, ஊர்வலம், பாட சாலைமாணவர்களின் கலாசார நிகழ்ச் சிகள் என்பன நடைபெற்றன. மாலை நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் மட் டக்களப்பு விபுலாநந்த இசைக்கல்லூரி மாணவியரின் இசைநிகழ்ச்சி இடம் பெற்றது. இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ், மொரட்டுவ பல் கலைக்கழகத் துணைவேந்தர் பேரா சிரியர் எவ். டி. சில்வா, சென்னை இராமகிருஷ்ண மடத்தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஸ்மரனானந்தாஜி ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர். தொடர்ந்து திருமதி. கௌரி கண்ணனின் பிரண வாலய மாணவியரின் நடன நிகழ்ச்சி களும் மிஷன் ஞாயிறு பாடசாலை மாணவியரின் வில்லுப்பாட்டு நிகழ்ச்சி களும் இடம்பெற்றன.

## சென்னையில் விபுலாநந்தர் நூற்றாண்டுவிழா

உலகத் தமிழர் மாமன்றம் மார்ச் மாதம் 30 ஆம் திகதி சென்னையில் விபுலாநந்தர் நூற் றாண்டு விழாவைக் கொண்டாடியது. அண்ணாமலைப் பல்கலைக்கழக முன் னாள் துணைவேந்தர் வை. சிட்டி பாபு தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில், அண்ணாமலைப் பல் கலைக்கழகத் துணைவேந்தர், ஏ.எம். இராமசாமி, குன்றக்குடி அடிகளார், தமிழறிஞர் கா. பொ. இரத்தினம் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

## அவுஸ்திரேலியாவில் உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாடு

அகில உலக தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் ஐந்தாவது மாநாடு அக் டோபர் 3 ம் திகதி முதல் 5 ம் திகதி வரை அவுஸ்திரேலியா சிட்னியில் நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டின் கருப்பொருள், தாயகம் கடந்து வாழும் தமிழரின் வாழ்க்கைப் பண்பாடுகளை ஒட்டிய ஆய்வாகும். அத்துடன், கவியரங்கம் கருத்தரங்கம், கலைநிகழ்ச்சிகள் என் பனவும் நடைபெறவுள்ளன. (விலா சம் – மாநாட்டுக் காரியாலயம் ஐ. சி. டி. சி. 92, த. பெ. இல. 60, கோம் பூஸ் சவுத், என். எஸ். டபிள்யூ. 2140 அவுஸ்திரேலியா)

★ பண்டாரவளை தமிழ் மகாவித்தியா லயத்தின் புதிய கட்டிடத் திறப்புவிழா வும், பரிசளிப்புவிழாவும், மார்ச் 21 ம் திகதி இடம்பெற்றன. இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு, புதிய கட்டிடத்தைத் திறந்து வைத்ததோடு, மாணவர்களுக்குப் பரிசில்களையும் வழங்கினார். இக்கட்டிடத்திற்கான நிதி கடந்த ஆண்டு அமைச்சரின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சித்திரை மாதத்து சித்திரா பௌர்ணமி

● எஸ். தெய்வநாயகம்

மாதங்களில் முதன்மையானது சித்திரை. மாத ஆரம்பம் தமிழர்களின் புது வருட ஆரம்பம். பொலிவையும் பூரிப்பையும் ஏற்படுத்தக்கூடியது. அன்றைய தினம் நன்மையாக சந்தோசமாக கழியின் வருடம் முழுவதும் நன்மையாக முடிவுறும் என்பது தமிழரின் நம்பிக்கையும் சிங்களவரின் அசைக்க முடியாத எண்ணமும் ஆகும். இத்தகைய மாதத்தில் இரு சமூக மக்களும் போற்றித் துதிக்கும் பொன்னாள் சித்திரா பௌர்ணமி.

''ருதுக்களில் நான் வசந்த ருது'' என்று கீதையிலே கிருஷ்ண பகவான் கூறியிருக்கிறார். வசந்த காலமான இக்காலத்தில் மக்கள் மட்டுமல்லாமல் சகல ஜீவ ராசிகளும் மகிழ்ச்சியுடன் இருப்பதனைக் காணமுடியும். மல்லிகை, முல்லை மலர்கள் மணம் சொரிந்து இதயத்துக்கு இதமளிப்பதோடு வசந்தகால இளந்தென்றலின் சுகமும், தீஞ்சுவைப் பழங்களின் சுவையும் தாராளமாக பருகும் காலமிது.

> சோற்றை விட்டாலும் விட்டுவிடு. ஒரு தனியிடத்தே போயிருந்து உயர்நத சிந்தனைகள், அமைதி கொடுக்கக் கூடிய சிந்தனைகள் துணிவும் உறுதியும் தரக்கூடிய சிந்தனைகள் இவற்றால் அறிவை நிரப்பிக் கொண்டு தியானம் செய்வதை ஒரு நாளேனும் தவற விடாதே.
>
> -பாரதியார்-

நட்சத்திரங்கள் இருபத்தேழு (27) இதில் நடு நட்சத்திரமாக விளங்குவது சித்திரை நட்சத்திரம் இது பூரணையுடன் கூடிவரும் காலம் சித்திரை பௌர்ணமியின் விசேட அம்சமாகும். சித்திரை பௌர்ணமி மிகவும் பேறுபெற்ற ஒரு தினம். எல்லாவிதமான விரதங்களையும் கைக்கொள்ளும், பலனைத் தரக்கூடியது சித்திரை பௌர்ணமி. சிந்தைக்கு அறிவூட்டும் நாள் எனவும் கூறலாம். இத்தினத்தில் விரதமிருப்போரும் இந்நாளை புனிதமாகப் பேணுவோரும் பலவித செல்வங்களை அனுபவிக்கக் கூடியவர்கள், என்று புராண இதிகாசங்கள் செப்புகின்றன.

இந்திரன் முதலிய தேவர்கள் பூமியில் வந்து சஞ்சரிக்கும் பொன்னாள் என்று புராணம் கூறுகின்றது. இத்தினத்தில் தான் சித்திர புத்திர நாயனார் பிறந்தார் என்று கூறுவாரும் உளர். இந்து சமயம் மறுபிறப்பு கொள்கையை ஏற்று அதன்வழி ஒழுகும் சமயம். ஒருவன் இறந்தபின் ஆன்மாவானது அது செய்த நன்மை தீமைகளைப் பொறுத்து மறு பிறப்புப் பலனை பெறுவதாக கூறுவர். மறுபிறப்பை யாரும் மறுக்கமுடியாது உள்ளதால் ஒரு பிறப்பில் செய்த பலன்கள் யாவும் அடுத்த பிறப்பை அடைவதற்கு அவருடைய நன்மை தீமைகள் வழியமைக்கின்றன. இதற்கு சித்திர புத்திரனாரின் ஏடுகள் சாட்சியாக அமைவு பெறும் என்பது ஐதீகம். சித்திர புத்திரனாரின்

ஒரு குடம் பாலில் ஒரு துளி நஞ்சு கலந்தால் பால் முழுவதும் கெட்டுவிடுவது போன்று ஒருவர் எவ்வளவு நல்ல குணமுடையவரா யிருந்தபோதும் ஒரு சிறு கெட்ட குணமிருக்குமானால் மற்றெல்லா நற்குணங்களையும் அது கெடுத்து விடும்.

–சுவாமி கங்காதரானந்தா–

கீழ்–யமன், யமதூதர்கள் கடமையாற்றி ஒருவரின் மரண மறு உலகப் பாதைக்கு வழி காட்டுகின்றனர் என்ற கருத்தும் பலரிடம் உண்டு. மறுபிறப்பை நினைவு படுத்தி நல்வழி காட்டவே சித்திரா பௌர்ணமியன்று ஆலயங்களில் சித்திரக் கதை படித்து சித்திரைக்கஞ்சி போன்ற பிரசாதங்கள் ஆலயங்களில் வழங்கப்படுகின்றன.

வாழ்வின் இலட்சிய ஈடேற்றம் செம்மையாக நடைபெறுவதற்கு இது வழி காட்டியாக உள்ளது என்பதை இப்புராணப்படிப்பு உணர்த்துகின்றது. தற்போதைய விஞ்ஞான உலகில் இவைகளை நம்ப முடியாத நிலையில் இருந்தாலும் கூட மறுபிறப்பு என்ற நம்பிக்கை இருக்கும்போது இவைகளை நம்பாமலும் இருக்க முடியவில்லை. இலங்கையில் மாத்தளையில் தம்புள்ளை வீதியில் 5ம் கட்டையில் சித்திர புத்திரனார் ஆலயம் உண்டு. இவ்வாலயத்தில் சித்திரா பௌர்ணமி அன்று சித்திரக்கதை காவியம் படிக்கப்படுவதோடு சித்திரபுத்திர நாயனாருக்கு அபிஷேக ஆராதனைகளும் இடம்பெறுகின்றன. அன்னதானம் போன்றவைகளும் நடைபெறுகின்றன. இது தவிர இலங்கையின் பல பாகங்களிலும் உள்ள சைவ ஆலயங்களில் சித்திரக்கதை படிக்கப்படுவதோடு சித்திர புத்திரனார் போற்றப்படுகின்றார்.

## சித்திரகுப்தரின் வரலாறு

முன்னொருகாலத்தில் யமதர்மர் ஸ்ரீ பரமேஸ்வரனிடம் கைலாயம் சென்று இந்த பூவுலகில் இறப்பவரில் யார் பாவி? யார் பக்தர் என்பதை அறிவது மிகவும் சிரமமாக இருப்பதாகவும் அதனை சரியாக அறிய வழி செய்யும் படியும் வேண்டினார்.

பிரம்மா, விஷ்ணு மகாதேவர்கள் யமதர்மனின் வாதம் சரியானது எனக் கூறினர். பார்வதி பரமேஸ்வரர்கள் சூரியனை அவனது மனைவி நிலாவதியை வம்ச விருத்திக்காக ஆசிர்வதிக்க அவர்களுக்கு ஒரு குழந்தை பிறந்தது. அவனுக்குச் சித்திரபுத்திரன் என்ற நாமத்தை அளித்தனர்.

சித்திர புத்திரர் கடும் தவம் செய்து இஸ்டசித்தி வரம் பெற்றான். பார்வதி பரமேஸ்வரனிடம் இருந்து பெற்ற இவ்வரத்தின் மகிமையால் சித்திர புத்திரனுக்கு உலகில் நடக்கும் எல்லாவிஷயங்களும் தெளிவாகத் தெரிந்தது. ஒவ்வொருவரைப் பற்றியும் நன்கறிய முடிந்தது. நல்லதையும் கெட்டதையும் அப்போதைக்கப்போது அறிந்தமையால் யமதர்மனுக்கு கணக்கு எழுத சித்திர புத்திரனை அழைத்துக் கொண்டார் பரமேஸ்வரர்.

உரிய வயதில் பிரபாவதி நீலாவதி கன்னிகாம்பாள் என்ற மூன்று மனை

எவரையும் குற்றம் சொல்லாதே. ஒரு பூச்சியையும் கூட குற்றம் சொல்லாதே. பக்தி வளர வேண்டுமென்று நீ இறைவனைப் பிரார்த்திப்பதைப் போலவே பிறரைக் குற்றம் சொல்லாமல் இருக்கவேண்டுமென்றும் பிரார்த்தனை பண்ணிக்கொள்வாயாக

–ஸ்ரீ இராமகிருஷ்ணர்–

விகளை மணந்தார் சித்திரபுத்திரர். பிர பாவதிக்கும் நீலாவதிக்கும் பிறந்த பிள் ளைகள் வட இந்தியாவின் பல பகுதி களை அரசாக ஆண்டனர். தேவி கன்னி காம்பாளுக்கு பதினெட்டு பிள்ளைகள் அவர்களுக்கு 64 குழந்தைகள் அவர்கள் எல்லோரும் தவக்கோலப் பூண்டு இமால யம் சென்று தவமியற்றினர்.

சித்திரனாருக்கு யமலோகத்தில் கணக்கு எழுதும் உத்தியோகம் அமைந் தது. பாவ புண்ணியங்களை கணக்கெடுக் கும் தொழில். அவர் ஒவ்வொருவருடைய பாவ புண்ணியங்களை கணக்குச் செய்து கொடுக்க அதன்படி யமதர்மராஜா அந்த அந்த மனிதனுக்கு தகுந்த பலனையோ, தண்டனையோ அளிப்பார்.

சித்திரகுப்தரின் பிள்ளைகள் 64 பேர். இயான மகரிஷியிடம் குருகுல வாசம் செய்து பிற்காலத்தில் சேனிய சோழன் என்ற அரசன் ஆட்சிக் காலத்தில் இவர் களுக்கு 64 கிராமங்களை காணிக்கை யாக அளித்து காஞ்சியில் இருக்கும் படி யாக கேட்டுக் கொண்டதாக வரலாறு கூறுகின்றது.

காஞ்சியில் நெல்லுக்காரத்தெரு என வழங்கும் தெற்கு இராஜ வீதியில் சித் திரபுத்திரனார் திருக்கோயில் உண்டு. இங் குள்ள மூல விக்கிரகம் சித்திரபுத்திரனார் கையில் ஏடும் எழுத்தாணியும் கொண்டு அமைந்து காட்சிதருகிறார். எனவே இதி லிருந்து சித்திரனார் மகிமையை உணர்ந்து கொள்ள முடிகின்றது.

இந்தியாவில் தமிழ் நாட்டிலும் பல இடங்களில் இவருக்கு ஆலயங்கள் இருப் பதைக் காணலாம் சித்திரா பௌர்ணமி தமிழ் நாட்டில் இந்திரவிழாவாக கொண் டாடப்படுகின்றது. இந்திரன் போன்ற தேவர்கள் பூவுலகில் இக்காலத்தில் மக்க ளோடு சேர்ந்து களிப்புறுகின்றனர் என்ற ஐதீகம் இன்றும் உண்டு. கோவலன் மாதவி காலத்தில் இந்திரவிழா சிறப்பாக கொண்டாடப்பட்டது என்பதற்கு ஆதா ரங்கள் இருப்பதோடு கோவலனும் மாத வியும் இந்த இந்திர விழாவில் கலந்து கொண்டதன் மூலமே கணவன் மனைவி ஆனார்கள், என்றும் கூறுவர். சங்ககாலத் துக்கு முன்னும் அதன் பின்னும் கூட இந்த இந்திரவிழா ஒவ்வொரு தமிழ் நாட்டு மன்னர்களாலும் போற்றித் துதிக் கப்பட்டதை வரலாற்றுச் சாதனங்களில் இருந்து உணரக்கூடியதாகவுள்ளது. இன் றும் தமிழ் நாட்டில் இந்திரவிழா போற்றித் துதிக்கப்படுகின்றது.

அடுத்து தமிழர்களின் வருடப் பிறப்பு மாதமாக சித்திரை கணிக்கப்படுவதால் அந்த மாதத்து பூரணை தமிழர்களின் முதல் பூரணையும் ஆகும். சிங்கள மக் களுக்கும் இதுவே புதிய வருடமாதமும் பௌர்ணமியும் ஆகும். எனவே இந்த பௌர்ணமி தினத்தை இருசாராரும் புனி தமாக பேணுகின்றனர். இதன் மூலம் இரு மதத்தவர்களுக்கும் சித்திரா பௌர்ணமி மிகவும் பேறுடையது என்பதைத் தெளிவு படுத்துகின்றது. சூரியன் மேட இராசியில் சஞ்சரிக்கும்போது வரும் பௌர்ணமி தினம் மிகவும் ஒளிக்கதிர்கள் கூடியதும் பூரண பிரகாசம் பெற்றதுமாகும் என சோதிட விற்பன்னர்கள் கூறுகின்றனர். சூரியனது சொந்த வீடு மேடமும் சிங்க மும் ஆகும். இந்த சொந்த வீடான மேடத்திற்கு சூரியன் வந்ததையே புது வருட பிறப்பு தினம் உணர்த்துகின்றது. சித்திரைக் காலம் புழுக்கம் கூடிய கால மாக இருந்தாலும்கூட மனதுக்கு இத மளிக்கும் காலமாகவும் அமைவுபெறுகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

> உள்ளொன்று வைத்துப்
> புறமொன்று பேசுவார்
> உறவு கலவாமை வேண்டும்
>
> —வள்ளலார்—

சித்திரா பௌர்ணமி தினம் சிவனுக்கும் விநாயகருக்கும் நடக்கும் பெருவிழாவாகும். இத்தினத்தில் சிவனாலயங்களிலும் விநாயகர் ஆலயங்களிலும் சிறப்பான அபிஷேகமும் ஆராதனைகளும் இடம்பெறுவதோடு திருவிழா உற்சவங்களும் இனிதாக நடைபெறுகின்றன. அத்தோடு சித்திரைக் கதை படித்தல் சித்திரைக்கஞ்சி வழங்கல் என்பன இவ்விரு ஆலயங்களிலும் பெருங் கோலாகலமாக செய்யப்படுகின்றன. சிவன் அழித்தல் தொழிலைச் செய்பவர். அழித்தல்என்றால் மக்களை அழிப்பவர் அல்லர். ஜீவராசிகள் மீது உறைந்துள்ள ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களையும் போக்கி சுத்திகரிப்பவர் என்பது பொருளாகும். இதற்கு சித்திர புத்திரனாரைப் போன்ற கணக்குப் பிள்ளையும் மிகவும் சேவை யாற்றுகின்றார். சித்திரபுத்திரனார் சிவனின் ஒரு அம்சம் எனக் கூறுவாருமுளர். அந்த சிவ அம்சம் கொண்ட பேறுடைய தினமே சித்திரா பௌர்ணமி தினமாகும்.

அடுத்து இந்த சித்திரா பௌர்ணமி தினம் அன்னையை இழந்தவர்கள் விரதம் பூண்டு அன்னைக்காக பிதிர்க்கடன் கொடுக்கும் தினம் என்றும் கூறுவர், ஆடி அமாவாசை தினம் தந்தையை இழந்தவர்களுக்குஎவ்வளவு முக்கியத்துவம்பெற்றதோ அதேபோலதாயைஇழந்தவர்களுக்குதிவசம் செய்யும் நாளாக சித்திரா பௌர்ணமி விளங்குவதால் தாயை இழந்தவர்கள் இத்தினத்தில் விரதம் இருந்து அவரை நினைத்து செய்யும் பிதிர்க்கடன் அவர் ஈடேற்றத்துக்கு வழி செய்யும் என்பது ஞானிகளின் நம்பிக்கை. இந்நன்னாளில் இந்துக்களாகிய நாம் விரதம் இருந்து ஆலயங்களிலும் வீடுகளிலும் புனிதம் பேணி தீபம் ஏற்றி அபிசேக ஆராதனை செய்து நமது பாவபுண்ணியங்களை எண்ணி மனம் கசிந்து இறைவன் திருப்பாதங்களை வணங்குவோமாக.

# குறள், தேவாரம், கீதை

குறள் :-

அழுக்காறு அவா வெகுளி இன்னாச்
சொல் நான்கும்
இழுக்கா இயன்ற(து) அறம்.

பொறாமை, ஆசை, கோபம், கடுஞ்சொல் ஆகிய நான்கினையும் ஒழித்து இடைவிடாமல் நடப்பது அறம்.
(பாயிர இயல், அறன்வலியுறுத்தல்-35)

தேவாரம்:-

மீளா அடிமை உமக்கே ஆளாய்ப்
பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளே கனன்று
முகத்தால் மிகவாடி
ஆளாய் இருக்கும் அடியார் தங்கள்
அல்லல் சொன்னக்கால்
வாளாங்கிருப்பீர் திருவாரூரீர்
வாழ்ந்து போதீரே.

திருவாரூர் இறைவ, நீங்காத அடிமைத் தொண்டு செய்து என்றும் உமக்கே ஆட்பட்டு நிற்கும் அடியார்கள் பிறரிடம் எதையும் வேண்டமாட்டார்கள். துன்பம் நேரும் போது மூண்டு எரியாது உள்ளே வெந்து கொண்டிருக்கின்ற நெருப்பைப் போல மனத்தால் வருந்தி முகம் வாடி நிற்பார்கள். அவர்கள் தரும் துன்பத்தை உம்மிடம் வாய் திறந்து சொல்லும் போது நீர் பேசாதிருக்கின்றீர். இது உமது தன்மையாகில் நீர் இனிது வாழ்வீராக.

சுந்தரர் தேவாரம் – தலம் – திருவாரூர்

கீதா சுலோகம்.-

ப்ரஜஹாதி யதா காமான் ஸர்வான்
பார்த்த மனோகதான்
ஆத்மன்யே வாத்மனே துஷ்ட
ஸ்திதப்பரக்ஞஸ் ததோச்யதே

பார்த்தனே,

மனக்கற்பனையில் எழும் புலன்பற்றுக்ளின் பல விதங்களைத் துறந்து எப்பொழுது ஒருவனது மனம் தன்னில் திருப்தி அடைகிறதோ அப்போது அவன் உன்னத உணர்வில் நிலைபெறுறான்.

(2ம் அத்தியாயம், 55 ம் சுலோகம்)

ஆலய வலம்

# சம்பூர் ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலயம்

ஈழத்தில் இதிகாச புகழ் வாய்ந்த பத்திரகாளி அம்மன் ஆலயங்களுள் சம்பூர் பத்திரகாளி அம்பாள் ஆலயமும் ஒன்றாகும். அன்னையின் அரிய வரலாறு ஏட்டு பிரதிகளில் பெட்டகம் ஒன்றில் பாதுகாக்கப்பட்டிருப்பதாகவும், பின்னர் அவை இயற்கை அழிவுகளால் சிதையுண்டு காணாமல் போனதாகவும் பெரியோர்கள் கூறுகின்றார்கள். இருப்பினும் இவ்வூர் மக்களால் கூறப்படும் கர்ண பரம் பரைக்கதைகளைக் கொண்டு கோண நாயக்க கல்வெட்டு பிரதியில் இருந்தும் அம்மாளின் உற்பத்தியை ஓரளவு அறியலாம். திருகோணமலை கோணநாயக்க ஆலயத் திருப்பணியில் ஈடுபட்டிருந்து குளக்கட்டு மன்னன் இந்திய சிற்பிகளைக் கொண்டு சில விக்கிரகங்களைக் கல்லில் வடித்தான். பத்திரகாளி, பத்தினியம்மன் செம்மனாச்சியம்மன் என்பனவாகும். மேற்கூறிய தெய்வச்சிலைகள் ஓடத்தின் மூலம் கோணேசர் மலைக்கு கிழக்குப் புறமாகவுள்ள சாம்பூரணம் என பண்டைக்காலத்தில் அழைக்கப்பட்ட 'சம்பூர்' கிராமத்தில் 'கெவுளிமுனை' என்னும் கடற்கரைக்கு கொண்டுவரப்பட்டன. இங்குள்ள ஓர் மலையில் மேற்படி சிலைகள் பிரதிஷ்டை செய்யப்பட்டு இப் பகுதிக்கு பொறுப்பான 'வன்னிமை' என்பான் வணங்கிவந்ததாகவும், இம் மலை மத்தள வடிவில் அமைந்ததால் 'மத்தள மலை' என அழைக்கப்பட்டதாகவும் அறியக்கிடக்கிறது.

> உங்கள் சாத்திரங்களை கங்கையில் எறிந்துவிட்டுப் பாமர ஏழை மக்களுக்கு முதலில் உண்ண உணவும் உடுக்க உடையும் சம்பாதிப்பது எப்படி என்று கற்றுத் தாருங்கள். அதற்குப் பிறகு நேரம் கிடைத்த போது சாத்திரங்களை எடுத்து வைத்துக் கொண்டு அவர்களுக்குப் படித்துக் காட்டலாம். அவர்களது உலக வாழ்க்கைக்கான தேவைகள் தீர்க்கப்பட்டாலொழிய நீங்கள் கூறும் ஆன்மீகக் கருத்துக்களை அவர்கள் காதுகொடுத்துக் கூட கேட்கமாட்டார்கள்.
>
> —சுவாமி விவேகாநந்தர்

விக்கிரகங்களை ஏற்றிக் கொண்டு வந்ததாக கூறப்படும் தோணியும் மத்தள மலையும் இன்றும் சம்பூர் கடற்கரை அருகே காணக்கூடியதாக இருக்கின்றது. மத்தளமலையில் வைக்கப்பட்ட விக்கிரகங்கள் காலத்தின் விளைவினால் பல இடங்களுக்கும் இடம் பெயரப்பட்டு சென்றிருக்கின்றன. அவைகளில் பத்திரகாளியம்மன் சிலை சம்பூரிலும், பத்தினியம்மன் சிலை நிலாப்பனையிலும், செம்மனாச்சியம்மன் சிலை ஈச்சலம்பற்றையிலும் வைத்து பிரதிஷ்டை செய்யப்பட்டன.

குளக்கோட்டு மன்னனால் அமைக்கப்பட்ட வில் என்று அழைக்கப்படும் அழகிய குளத்தையும், பூதகணங்களால் தூக்கி வந்து அடுக்கப்பட்டதெனக் கூறப்படும் 'கொற்கத்தீவு' கற்களையும் கல்வெட்டில் 'பள்ளம்வெளி' என அழைக்கப்படும் நெற்காணிகளையும் இன்றுஞ் சம்பூரில் காணக் கூடியதாக இருக்கின்றது. கோணேசப் பெருமானுக்கு மல்லிகை பூ, பசு நெய், தேன், தாமரைத்தண்டு நூல், சந்தனக் கட்டை வில்வம் என்பனவற்றை கெவுளி முனையிலிருந்து கொடுக்கும் 'மீகாமன்

## காயத்திரி மந்திரம்

ஓம் பூர்புவஸ்ஸுவ!

ஓம் தத் ஸவிதுர்வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோ; ந
ப்ரசோதயாத்.

யார் நம்முடைய அறிவைத் தூண்டுகிறாரோ அந்தச் சுடருடைய கடவுளின் மேலான ஒளியைத் தியானிப்போமாக.

என்னும் ஓடக்காரனால் மத்தள மலையருகே அம்மன் சிலை கண்டு எடுக்கப்பட்டு அப்பொழுது சாம்பூரில் குடியிருந்த சைவ மக்களும் மூகாமைக்காரியப்பர் அவர்களும் மேற்காட்டி நிலபாவாடை போன்ற வரிசைகளுடனும், நிறைகுடவைபவங்களுடனும் சுமந்து வரப்பட்டுசம்பூரில் பசும் சோலைகள் அடர்ந்த வில்லுக்குளத்தருகே காட்டுத்தென்னை மரநிழலில், இலை குழையால் பந்தல் இட்டு அம் மரநிழலில் சிலையை தாபித்து வாரம் தோறும் செவ்வாய் கிழமைகளில் பொங்கல் இட்டு வந்ததாகவும் பெரியோர்கள் கூறுவர்.

அன்று முதல் 1970 ம் ஆண்டு வரை காரியப்பர் குடிசையைச் சேர்ந்த சைவர்களே பூஜை செய்து வந்தனர். காலம் செல்லச் செல்ல இங்கு வரும் அடியார்களின் வசதியைக் கருத்தில் கொண்டு ஆகம விதிப்படி ஆலயம் அமைக்கப்பட்டு வந்தது. இப் பிரதேச மக்களின் பூரண ஒத்துழைப்புடன் 1970 ம் ஆண்டு தைத் திங்களில் பத்திரகாளி அம்மாள், வீரபத்திரர், விநாயகர், வயிரவர், நரசிங்க வைரவர் ஆகியவற்றுக்கு தனித்தனி ஆலயம் அமைக்கப்பட்டு அவைகள் பிரதிஷ்டை செய்யப்பட்டு மகா கும்பாபிசேகம் நடைபெற்றது. அன்று முதல் குருக்கள் மாரே பூஜை செய்து வருகின்றனர். 1979 ம் ஆண்டு ஆவணித்திங்களுக்கு முன்னர் சம்பூரில் இருந்த பத்துக்குடி மூகாமைக்காரர்களால் ஆலயப்பரிபாலனம் நடத்தப்பட்டு வந்தது. 1979 ம் ஆண்டு தொடக்கம் வெளியூர் பிரதிநிதிகளையும் சேர்த்து பதினான்கு உறுப்பினர்களைக் கொண்ட நிர்வாகசபையினரால் ஆலயநிர்வாகம் செவ்வனே நடைபெற்று வருகின்றது. இங்கு பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு முறை 'பாலத்தாபனம்' செய்து மகா கும்பாபிசேகம் நடைபெறும். 1990 தை திங்களில் இவ்வாலயத்தில் நவக்கிரக தேவர்களுக்கென தனியான ஆலயம் சிற்ப முறைப்படி அமைக்கப்பட்டு அதில் (ஒன்பது) கிரக விக்கிரகங்களும் பிரதிஷ்டைசெய்யப்பட்டு பூஜை நடைபெற்று வருகின்றது'

நாட்டு நிலைமைகள் சீராக இருக்குமாயின் ஈழத்தின் பல பாகங்களில் இருந்தும் அடியார்கள் இங்கு வந்து தமது நேர்த்திகளை முடித்துச் செல்வார்கள். அந்த அளவிற்கு மிகவும் பிரசித்தி பெற்ற பழமை வாய்ந்த ஆலயமாக இது திகழுகின்றது. காட்டுத் தென்னை மரத்தடியில் அம்மனுக்கு தனியாக ஆலயம் அமைக்கப்பட்டு பூஜை முறையாக நடைபெற்று வருவதையும் குறிப்பிடலாம். இவ்வம்மன் வேறு இடத்திற்கு எழுந்தருள முடியாத படியால் தான் புதிதாக இந்தியாவில் இருந்து அம்மன் சிலை கொண்டு வரப்பட்டு புதிய ஆலயத்தில் 1970 ம் ஆண்டு பிரதிஷ்டை செய்யப்பட்டு பூஜை நடைபெற்று வருகின்றதுஎனலாம்.

இவ்வாலயத்தில் செவ்வாய்க்கிழமைகளில் பொங்கல் வைத்து பூசை செய்யப்படுகின்றது. ஒவ்வொருவரும் ஏழு பானைகள் வைத்து பொங்குகின்றனர் குளக்கோட்டு மன்னனால் குடியமர்த்தப்பட்ட ஏழு

ஓநாய்க்கிடையில் வளரும் சிறுவன் ஓநாய் போன்று ஆய்விடுவான். துஷ்டர்களுக்கிடையில் வளர்பவன் துஷ்டன் ஆய்விடுவான். சான்றோர்க்கிடையில் வளர்பவன்—தானே சான்றோன் ஆய்விடுவான்.

—சுவாமி சித்பவானந்தர்

குடிமக்களின் மகிமையைக் கௌரவிப்பதற்காகவே இம் முறையென ஐதீகம் நிலவுகின்றது.

இங்கு சித்திராபௌர்ணமியை அடுத்துவரும் ஐந்தாம் நாள் தொடக்கம், அமாவாசை வரையுமுள்ள பத்துநாட்கள் இலட்சார்ச்சனை நடைபெற்று முடிவில் சகஸ்ர சங்காபிஷேகம் செய்யப்படுகின்றது. நவராத்திரி, சிவராத்திரி, கௌரிவிரதம், திருவெம்பாவை, தைப்பொங்கல், சித்திரைப் பிறப்பு என்பன விஷேட நாட்களாகக் கொண்டாடப்பட்டுவருகின்றன.

சம்பூர்க்கிராம மக்களுக்கும், சம்பூருக்கு வந்து உழைக்கும் மக்களுக்கும் அன்னை பத்திரகாளி வாழ்வின் நலமெல்லாம் அளிக்கும் கருணைத் தெய்வமாகக் கருதப்படுகின்றாள். ஆதலின் சம்பூர் அம்மனுக்கு பயமும் பக்தியும் நிறைந்த பக்தர்களின் கூட்டம் பெருகிக்கொண்டே இருக்கிறது.

தொகுப்பு: குமார் வடிவேல்

ஆதாரம்: திருமலை மாவட்டத் திருத்தலங்கள்.

## விபுலானந்தர் சிந்தனை

இறைவனின் படைப்பு முழுவதும் ஒரு குறிக்கோளை நோக்கியே இயங்குகிறதென்பதும் ஒவ்வொரு தனிமனித வாழ்வும் புதிய பொருளோடும், புதிய அடையாளத்தோடும் அமைகின்றதென்பதுமே உண்மையான முடிவாகும். அறியாமையுள்ள மனிதன் கூட தான் சார்ந்துள்ள கூட்டத்தினரிடம் புத்தி பூர்வமற்ற மந்தை மதியினால் விசுவாசமுள்ளவனாக நடக்கின்றான். அதே விசுவாச உணர்வானது ஏனைய கூட்டத்தாரிடம் பகைத்துக்கொள்ளத் தூண்டுகின்றது. வளர்ச்சியடையாத சமுதாயத்தில் கடவுளும் குறுகிய மனப்பான்மையினரே, அங்கு முழுமையான மனித சமுதாயப்பார்வையில்லை. மனித சமுதாயம் முழுவதற்குமாக வரவுள்ள பிரகாசமான எதிர்காலத்தையும், சகோதரத்துவத்தையும் ஞானிகள் தோன்றி உணர்த்தினார்கள். வளர்ச்சியடையாத சமுதாயத்தின் வீண் பெருமையானது முழுமைகாண அவனை விடவில்லை. ஆரியர்களும், தாசர்களும், யூதர்களும், ஜென்னரல்களும், முஸ்லிம்களும், கபீர்களும், கிறிஸ்தவர்களும், ஏதஸ்சுகளும் ஆகிய இவர்களே வீண் பெருமையாளர்களாவர். இத்தகைய குருட்டுத்தனமான குறுகிய வீண் பெருமைகள் உண்மையை மறைத்து ஞானிகளின் உலகு தழுவிய சிந்தனைகளை மறைத்தன. மற்றெல்லாச் சமயங்களையும் விட இந்து சமயமானது மனிதனிடமுள்ள தெய்வீக இயல்பை அழுத்திக் கூறியுள்ளது. ஆனால் நடைமுறையில் நாம் பார்ப்பதென்ன? தமது மதத்தில் நம்பிக்கையுள்ள தம்முள் ஒரு பிரிவினரைத் தாழ்த்தப்பட்டவராகக் கருதி உலகத்தவர் பார்வையில் இந்த மத பக்தர்கள் பரிகாசத்துக்கு இடமாகின்றனர் குருமாரின் இந்தக் கொடுமை இன்னும் நீண்டு செல்ல முடியுமா? தீண்டாமையென்னும் சாபக்கேட்டை நீக்கி எல்லோருக்கும் நீதி வழங்க முற்போக்கான இந்துக்கள் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இந்துசமயம் எல்லா மதத்தவரிடமும் பொறுமை கடைப்பிடிப்பதோடு, எல்லா மதங்களையும் கொள்கையளவில் நடைமுறையிலும் கௌரவமாக மதித்து நடக்கவேண்டும்.

('நவயுகமனிதனுக்கு புராதன சிந்தனைகள்' என்ற சுவாமி விபுலானந்தரின் ஆங்கிலக் கட்டுரை நூலிலிருந்து.)

# முன்னறி தெய்வம்

முன்பு ஒரு காலத்தில், காசி மாநகருக்கு அருகில் கௌசிகன் எனும் அந்தண வாலிபன் வசித்து வந்தான். குருகுலத்தில் தங்கி, வேத சாத்திரங்களில் முறையாகப் பயிற்சி பெற்றான். புலனடக்கம் செய்து, தவம் புரிவதிலும் தேர்ச்சி பெற்றான். உலக அநுபவம் பெற யாத்திரை புறப்பட்டான். பிரும்மச்சாரியாதலால், பிட்சை எடுத்தே பசியாறி வந்தான்.

ஒருநாள் காலை வேளை, கௌசிகன் ஒரு கிராமத்தின் எல்லையில் அமைந்த குளத்தில் நீராடி, ஆடைகளை உலர்த்தி உடுத்திக்கொண்டு, குளக்கரை மரத்தடியில் அமர்ந்து, தியான யோகத்தில் ஆழ்ந்திருந்தான். அப்போது மரத்தின் மேல் இருந்த ஒரு கொக்கு எச்சம் இட்டது. அது கௌசிகனின் தோளில் வந்து விழுந்தது. அவ்வளவுதான். ஆத்திரம் பொங்க அண்ணாந்து பார்த்தான். 'நீ செத்து மடி!' என்று அவன் உள்ளம் சபித்ததை, கோபப் பார்வை புலப்படுத்தியது. மறுகணமே கொக்கு சுருண்டு தரையில் விழுந்து சவமாகி விட்டது.

இதைக் கண்ட கௌசிகனுக்கு முதலில் இரக்கம் ஏற்பட்டது. பிறகு தனக்கு எழுந்த முன் கோபத்தை எண்ணி வருந்தினான். முடிவில், ஒரு உயிரை அழிக்கும் வல்லமை தனக்குத் தவ வலிமையால் கிடைத்திருக்கிறதே என்று நினைத்து இறுமாந்தான்.

சிறிது நேரத்திற்கெல்லாம், பிட்சை ஏற்கப் பக்கத்துக் கிராமத்திற்கு வந்து சேர்ந்தான் கௌசிகன். ஒரு வீட்டுக்கு முன்னால் நின்று, ''அம்மணி, பிரும்மசாரிக்குப் பிட்சை அளியுங்கள்'' என்று குரல் கொடுத்தான்.

அடுக்களையில் அலுவலாக இருந்த வீட்டுத் தலைவி வெளியே வந்தாள். அப்போது அவளுடைய கணவன் களைப்புடன் வந்து சேர்ந்தான். உடனே அந்த மங்கை கணவனுக்குப் பணிவிடை செய்ய உள்ளே போய்விட்டாள். கணவனுக்குக் கை, கால் கழுவி விட்டு, விசிறி, களைப்பைப் போக்கி, உணவு பரிமாற உள்ளே அழைத்துச் சென்றாள். கணவன் சாப்பிட்டானதும், இளைப்பாறுவதற்கும் வசதி செய்து கொடுத்துவிட்டு, வெளியே வந்தாள்.

கௌசிகனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. எவ்வளவு நேரமாக வாசலிலேயே காத்து நிற்பது? வந்த யாசகரை ''உட்காருங்கள்'' என்று கூடச் சொல்லாமல், கணவனுக்கு உபசரணை புரியப் போய்விட்டாளே!

''மன்னிக்கவேண்டும், சுவாமி! கொஞ்சம் தாமதமாகி விட்டது. இதோ பிட்சை கொண்டு வருகிறேன்'' என்றாள் அந்தக் கற்பு நங்கை.

''வேதமாகிய, தவவலிமையுள்ள ஓர் அந்தண அதிதியை இப்படியா அவமதிப்பது? என்னை யார் என்று நினைத்துக் கொண்டிருக்கிறாய்?'' இறுமாப்பும் சினமும் பொங்கியது கௌசிகனின் பேச்சில்.

''மாணவரே! பத்தினிப் பெண்ணுக்குக் கணவர்தானே முன்னறி தெய்வம என்பதை நீங்கள் அறியாதது விசித்திரம்தான்; என்னையும் அந்தக் கொக்கு என்று நினைத்துக் கொண்டீரா? பார்வையாலேயே மாய்த்து விடலாமென்கிற எண்ணமோ? சரி. போய்ச் சேருங்கள்; மன்னித்தேன்'' என்றாள் அந்த நங்கை,

கௌசிகன் அப்படியே வெலவெலத்துப் போனான். 'குளக்கரையில் காலையில் நடந்ததை இந்த அம்மணி எப்படி அறிந்தாள்? தெய்விக சக்தி படைத்த பெண்மணி அவள். எப்படி இவளுக்கு இத்தகைய சக்தி ஏற்பட்டிருக்கிறது?'

''மாணவரே, ஏன் குழம்பிக்கொண்டு நிற்கிறீர்? நேரே மிதிலை நகரின் எல்லையிலுள்ள கிராமத்திற்குப் போங்கள். அங்கே வேடர் சாதியில் பிறந்த தர்ம வியாதர் எனும் கசாப்புக் கடைக்காரர் இருக்கிறார். அவரிடம் போய் மெய்ஞ்ஞான அறிவையும், அறத்தின் வலிமையையும் அறிந்து கொள்ளுங்கள். உங்கள் மனக் குழப்பத்திற்கு அங்கே தெளிவு ஏற்படும்; போய் வாருங்கள்'' என்றாள். பிறகு பிட்சையை அளித்துவிட்டு, உள்ளே சென்றுவிட்டாள் அந்த மங்கை.

கௌசிகனுக்கு வியப்புத் தாளவில்லை. 'கசாப்புக்கடைக்காரனுக்கா இவ்வளவு மகிமை!' அன்றே மிதிலைக்குப் புறப்பட்டுவிட்டான் கௌசிகன்.

சிறிய கசாப்புக் கடையில், எளிய தோற்றத்துடன் ஒரு சரிய மனிதனைப் பார்த்ததும், 'இவனிடமா அந்த அம்மாள் என்னை அனுப்பி வைத்தாள்!' என்று அதிசயித்தான் கௌசிகன். மரத்தடியில் இளைப்பாறிக்கொண்டிருந்த கௌசிகனிடம், அந்தக் கடைக்காரன் வந்து பணிவுடன் ''கணவருக்குப் பணிவிடை செய்துவிட்டு உங்களைச் சாவகாசமாகக் கவனித்த அந்த உத்தமப் பெண்மணியின் சொல்படி இங்கு வந்திருக்கிறீர்களா? சரி, என் இல்லத்திற்கு வாருங்கள், போகலாம்'' என்றான்.

கௌசிகன் இப்பேச்சைக் கேட்டதும் பிரமித்துப் போனான். 'இவனுக்கு எப்படி ஞானதிருஷ்டி ஏற்பட்டிருக்கிறது? கல்வி கேள்விகளில் வாய்ப்பில்லாத கொலைத் தொழில் வேடனுக்கா இத்தகைய தெய்வீக சக்தி!...'

கௌசிகன் தர்ம வியாதனுடன் அவன் குடிசைக்குச் சென்றான். கௌசிகனுக்கு ஓர் ஆசனம் கொடுத்து அமரச் செய்துவிட்டு, கசாப்புக்கடைக்காரன் தன் கிழத் தாய் தந்தையரை வணங்கி, ஆதரவுடன் பணிவிடைகள் புரிந்தான். தெய்வ மூர்த்திகளுக்குப் பக்தியே உருவெடுத்த ஒரு திருத்தொண்டன் சிரத்தையுடன் ஆராதனை புரிவதுபோல் இருந்தது அக்காட்சி. பரவசமடைந்தான் வேத விற்பன்னனான தவசி கௌசிகன்.

பணிவிடைகளை முடித்துக்கொண்டு, விருந்தாளியை உபசரிக்க வந்தான் அந்த எளியவன். கௌசிகன் தர்மத்தின் சொரூபத்தை உணர்ந்து கொண்டான். தர்ம வியாதனும், பல அரிய தத்துவங்களை அந்தண குமாரனுக்கு உபதேசித்தான்.

''வேத வித்தகரே! நற்பயன், பண்பு, மெய்யறிவு ஆகியவைகளுக்கு எதிரி கோபம்தான். ஆரம்பத்திலேயே சினத்தை அடக்கிவிட வேண்டும். 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்பதில் திட நம்பிக்கை வைத்து, அவர்களை ஆதரவுடன் பேணி வளர்த்து வாருங்கள். பல காலம் கடும் தவம் புரிந்து பெறும் சக்தியை விடப் பல மடங்கு அருள்வலிமையை நீங்கள் பெறுவீர்கள். பத்தினிப் பெண்களுக்குக் கணவன்மார்கள்தான் தெய்வம். அந்தத் தெய்வ வழிபாட்டால்தான் அந்த அம்மணி ஞானத்திலும் அருள் சக்தியிலும் சிறந்து விளங்குகிறாள். நீங்களும் உங்கள் முன்னெறி தெய்வங்களுக்குப் பணிவிடைகள் புரிந்து, பிறவிப் பயனைப் பெறுங்கள். அதுதான் மேன்மை தரும்'' என்று நல்லுரை கூறி, மகிப்புடன் வழியனுப்பி வைத்தான் தர்ம வியாதன்.

தொகுப்பு - குமார்வடிவேல்

பிறனுக்குத் துன்பமிழைக்காமல் இருப்பது எளிது. ஆனால் பிறரால் துன்பமிழைக்கப் படும் போது பொறுத்திருப்பது கடினம். அந்தக் கடினமான காரியத்தைப் பெரியோர்களால் தான் செய்யமுடியும்.

—சுவாமி சிவானந்தர்—

# பிழை செய்தலும் மன்னித்தலும்

பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன்

'பிழை செய்வது மானிட இயல்பு; மன்னித்தல் தெய்விக இயல்பு' என்று ஆங்கிலக் கவிஞர் அலெக்சாண்டர்போப் கூறினார். வேற்று மொழியில் கூறப் பெற்றாலும் உலகம் முழுவதற்கும் முக்காலத்துக்கும் எக்காலத்துக்கும் பொருந்தும் கருத்தாகும் இது.

பிழை செய்தல் என்பது மானிட உயிர்கள் விரும்பியோ விரும்பாமலோ அன்றாடம் செய்யும் செயலாகும்.

ஆனால் இங்கே மன்னித்தல் என்று கூறும்பொழுது கடவுள் நம்மை மன்னிப்பதைப் பற்றிக் கூறவில்லை. இங்கு கூற எடுத்துக்கொண்டது நமக்குப் பிழை செய்தவர்களை நாம் மன்னிப்பது குறித்தே யாகும்.

நமக்குப் பிழை அல்லது தீமையை யார் செய்கிறார்கள்? நம்மிடம் அன்பு செலுத்தும் நண்பர்கள், நம்மை வெறுக்கும் பகைவர்கள் ஆகிய இரு சாராரும் தீமை செய்கின்றனர்.

நண்பர்கள்கூடப் பிழை செய்வார்களா என்று கேட்கத் தோன்றுகிறதா? ஆம்! அறியாமை காரணமாகவும், அன்பின் மிகுதி காரணமாகவும் பிழை செய்யலாம்.

உடல்நலக் குறைவால் நாம் உண்ணக் கூடாது, குறிப்பிட்ட பொருளைக் குடிக்கக்கூடாது என்று இருக்கும்பொழுது நம்மை உபத்திரவம் செய்து உண்ணவும் குடிக்கவும் செய்யும் நண்பர்கள்,

உண்மையில் தீமைதான் புரிகின்றனர். இவை எளிதில் மன்னிக்கக்கூடிய பிழைகள்.

இரண்டாவது வகையினராகிய பகைவர் அல்லது விரோதிகள் நமக்குத் தீங்கிழைக்கின்றனர். அதிக அன்பினாலோ

> தேவையானதை வைத்துத் தேவையில்லாததை விட்டுவிடும் இயற்கையான அறிவு சகல ஜீவராசிகளிடத்தும் இயல்பாக அமைந்திருக்கிறது. மனிதனில் அது விவேகம் அல்லது பகுத்தறிவு என்ற சிறப்பான குணத்துடன் இருந்தும் பேராசையால் அது அறியப்படுவதில்லை.
>
> — சுவாமி கெங்காதரானந்தா

அறியாமையாலோ இவர்கள் இவ்வாறு செய்யவில்லை. உண்மையில் நன்கு ஆராய்ந்து எந்தத் தீமையைச் செய்தால் நாம் துன்பம் அடைவோம் என்பதை அறிந்து அந்தத் தீமையைச் செய்கின்றனர்.

இவ்வாறு நமக்குத் தீமை செய்கிறவர்கள் என்ன நோக்கத்தில் அவ்வாறு செய்கின்றனர்? நாம் மனவருத்தப்பட வேண்டும். உடல் துன்பம் அனுபவிக்க வேண்டும் என்பதே இவர்கள் நோக்கமாகும்.

இதிலும் உடல் துன்பத்தைக் காட்டிலும் மனத் துன்பம்தான் மிகவும் ஆழமானது. 'தீயினால் சுட்டபுண் உள் ஆறும் ஆறாதே நாவினால் சுட்ட வடு' என்பது குறள்.

எனவே நாம் மிகவும் மனவருத்தம் அடைய வேண்டும் என்பதற்காகவே நம் பகைவர்கள் நாவினால் சுடுகின்றனர்.

ஏதோ ஒரு காரணத்தால் இவர்கள் நம் பகைவராயினர். நாமும் நம்மை அறியாமல் இவர்களுக்குக் கெடுதல் செய்திருக்கலாம். அதனால் பகையை பூண்டனர் இவர்கள்.

இதன் எதிராக நாம் யாதொரு தீமையும் செய்யாவிட்டாலும் சிலர் நம்மிடம் பகைமை கொண்டு நாவினால் சுடுவார்கள்.

மிகச் சாதாரண நிலையிலிருந்து அதிர்ஷ்டவசமாக ஒரு வசதியான நிலையை ஒருவர் அடைந்துவிட்டதாக வைத்துக் கொள்வோம். இந்த நிலையை அடைவதற்கு அவர் ஒரு முயற்சியும் செய்யவில்லை: அதை அடைவதற்குரிய தகுதியும் அவரிடம் இராது: ஆனால் அதிர்ஷ்டவசமாக இந்த நிலை கிடைத்திருக்கும். தனக்குத் தகுதி இல்லை என்ற எண்ணமே அவருக்கு ஒரு தாழ்வு மனப்பான்மையை உண்டாக்கிவிடும். இந்தத் தாழ்வு மனப்பான்மை உடையவர்களின் நடைமுறையே சற்று வினோதமாக இருக்கும். தேவை இல்லாமல் பிறரை அவமதித்துப் பேசுவதில் இன்பம் காண்பவர்கள் இவர்கள். பிறர் தன்னை மதிப்பது தன் தகுதியினால் அல்ல. தன் பதவியினால் என்பதையும், இந்தப் பதவி நாளை போனால் யாரும் தன்னை ஒரு துரும்புக்குச் சமமாகக்கூட மதிக்கமாட்டார்கள் என்பதையும் உணரும் இவர்களுக்குத் தாழ்வு மனப்பான்மை தானே வந்துவிடும். இந்த நோய் உடையவர்களை வழிப்படுத்துவது என்பது இயலாத காரியம்.

அறிந்தோ அறியாமலோ நம்மால் தீங்கிழைக்கப் பெற்றவர்கள் நமக்குத் தீமை செய்வதை ஓரளவு புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால், எவ்விதக் காரணமும் இல்லாமல் பிறர் மனம் புண்படும்படி பேசும் இந்தத் தாழ்வு மனப்பான்மையினரை என்ன செய்ய முடியும்?

துன்பம் இழைக்கப்பட்டவரைப் பொறுத்தவரை இரண்டும் ஒன்றுதான்: யார் துன்பம் இழைத்தால் என்ன? பகைவர் செய்தாலும் தாழ்வு மனப்பான்மையர் செய்தாலும் துன்பம் இழைக்கப்பட்டவரைப் பொறுத்தவரை இரண்டும் ஒன்றுதான். இப்பொழுது ஆழ்ந்து சிந்திக்க வேண்டியது ஒன்று உண்டு. துன்பம் இழைக்கும் இரண்டு வகையினரும் (பகைவர் தாழ்வு மனப்பான்மையர்) நம்மிடம் என்ன எதிர்பார்க்கின்றனர்? துன்பம் செய்யப்பட்டவர் உடல் துன்பம் மனவருத்தம் என்ற

இரண்டையும் அடைய வேண்டும் என்பது தானே அவர்கள் எதிர்பார்ப்பது? அவர்கள் அவமானப்படுத்திப் பேசும்பொழுதோ, உடல் துன்பம் விளைவிக்கும்பொழுதோ நாம் மனவருத்தப்பட்டால் அவர்கள் எதிர்பார்ப்பதைச் செய்தவர்களாக ஆகிறோம். நாம் மனத்துன்பம் அடைவதைக் கண்டவுடன் அவர்களுக்கு ஒரு திருப்தி ஏற்படுகிறது.

இதன் எதிராக அவர்கள் அவமானப்படுத்திப் பேசும்பொழுது நாம் அதைக் காதில் வாங்காமல் இருந்தால் என்ன நடக்கும்? அவர்கள் எதிர்பார்த்தபடி நாம் வருத்தமோ ஆத்திரமோ அடையாததைப் பார்த்தவுடன் அவர்கள் திருப்தி அடைவதற்குப் பதிலாக இன்னும் கொஞ்சம் ஆத்திரம் அடைகின்றனர். அவர்கள் நம்மேல் செலுத்திவிட்டதாக நினைத்த பாணம் நம்மேல் தைக்க முடியாது போனவுடன், அவர்கள் மேலேயே சென்று பாய்கிறது. அதனால்தான் நாம் சட்டை செய்யவில்லை என்பதைக் கண்டவுடன் அவர்கள் இன்னும் அதிகமாக ஆத்திரம் அடைகின்றனர். இவ்வாறு செய்யாமல் நாமும் ஆத்திரம் கொண்டு எதிர்த்துப் பேசுவதனால் நம்மை நாமே அவர்கள் நிலைக்குக் கொண்டு போய்விடுகிறோம். அவர்கள் எதிர்பார்ப்பது அதுதானே? தன்னைப் போலவே நாமும் ஆகவேண்டும் என்று எதிர்பார்க்கிற அவர்கள் விருப்பம் நிறைவேறிவிடுகிறது. அவர்கள் செய்யும் அவமானத்தை பொறுத்துக் கொள்வதால் நாம் அடைவது வெற்றி; அவர்கள் அடைவது தோல்வி; அவர்கள் எதிர்பார்த்தபடி நாம் ஆத்திரம் கொண்டாலோ, மனவருத்தப்பட்டாலோ நாம் அடைவது தோல்வி; அவர்கள் அடைவது வெற்றி.

எளிதாகச் சொல்லிவிட்டோமே தவிர, இதை நடைமுறையில் கொண்டு செலுத்துவது மிகவும் கடினமான காரியம். என்றாலும் நமக்கு வெற்றி தருகிற இந்தச் செயலை முயன்று பார்ப்பதில் தவறு இல்லை.

பிறர் இழைக்கும் தீங்கைப் பொறுத்துக்கொள்வது நமக்கு வெற்றிதான் என்றாலும் நம் மனத்தின் ஆழத்தில் இந்தத் துயர வடு இருக்கத்தான் செய்யும். நாளடைவில் அது நம்மை உருக் குலைத்துவிடும். எதையும் வெளியில் காட்டாமல் மனதிற்குள்ளேயே வைத்துக்கொள்பவர்கள் நாளடைவில் இரத்த அழுத்தம் போன்ற நோய்களுக்கு ஆளாக நேரிடும். அப்படியானால் இதற்கு வழி என்ன? பிறர் இழைக்கும் அவமானத்தைப் பொறுப்பதால் அப்பொழுது கிடைப்பது வெற்றி. இந்த வெற்றி நிலைக்க வேண்டுமானல் இந்தப் பொறுமை நாளடைவில் நமக்குத் தீங்கு செய்யாமல் இருக்க ஒரே வழிதான் உண்டு; அதுதான் மன்னிக்கும் இயல்பு.

மன்னிப்பது என்றால் என்ன? பிறர் செய்யும் தவறுகளை, தீமையை அந்த நேரத்தில் பொறுத்துக்கொள்வதுடன் அவர்கள் அறியாமையால் செய்கிறார்கள்; ஆகவே அவர்கள்மேல் ஆத்திரப்படக் கூடாது, என்று உணர்ந்து, அவர்கள்மேல் இரக்கப்படுவதே மன்னிப்பது என்பதாகும். இந்த முறையில் நமக்கு தீங்கு செய்பவர்களிடம் ஆத்திரப்படுவதற்குப் பதிலாக அன்பு செய்கிறோம். அவர்கள் செய்யும் தீமையை

அப்பொழுதே மறந்துவிடுகின்றோம். இதனால் நம்மைப் பொறுத்தவரை எத்தகைய நோய் முதலிய ஒன்றும் வருவதில்லை. நம்மை இழிவுசெய்தவர்கள் வெற்றிவிழாக் கொண்டாட முடியாது. அதற்குப் பதிலாக 'ஐயோ! இவ்வளவு பண்புடையவருக்குத் தீமை செய்துவிட்டோமே!' என்று அவர்கள் தன்னிரக்கம் கொண்டு திருந்தவும் ஏதுவாகும்.

அப்படியானால் ஒருவர் வேண்டுமென்றே நம்மை நாலுபேர் எதிரில் அவமானப் படுத்துவதாக வைத்துக்கொள்வோம். மன்னித்துவிட வேண்டுமா? ஆம், மன்னிப்பதால் அந்த நேரத்தில் நமக்கு வெற்றி, பிறகு தோல்வி முதலியன இல்லை. அவரைப் பொறுத்த வரை நம்மிடம் ஆத்திரம் மூட்ட முடியாததால் அந்த நேரத்தில் தோல்வி; நாளடைவில், அவர் திருந்தவும் பகைமையை விட்டுவிடவும் ஏதுவாகலாம். அதுசரி! ஒருவரை ஒருமுறை மன்னிக்கலாம்; இருமுறை மன்னிக்கலாம்; விடாமல் அவர் அவமானப்படுத்தினால் என்ன செய்வது என்ற வினாத் தோன்றினால் விடை என்ன? இதோ இயேசுபெருமான் விடை கூறுகிறார். ஜெருசலேம் ஆலயத்தில் அப்பெருமகனார் உபதேசம் செய்து கொண்டிருக்கையில் ஒருவர், 'என் பகைவனை ஒரு முறை மன்னிப்பதா? எழுபது முறை மன்னிப்பதா?' என்று கேட்டவுடன் பெருமான் 'ஏழு ஏழாயிரம் தடவைகள்' என்று விடை கூறினார். அதாவது எத்தனை முறை என்று கணக்குப் போடாதே; மன்னித்துக்கொண்டே இரு என்பதே இதன் பொருள்.

நன்றி : இராமகிருஷ்ண விஜயம்

---

# ஓ ! சாரதே !

★ அன்புமணி

அன்னை சாரதா! அன்புத் தெய்வமே!
உன்னைப் பாடினோம் உனது வார்த்தையே
எங்கள் பாடலும் இனிய கீதமும்
உந்தன் பாடலே உனது ஜீவனே!

அன்னை அருளதும் அன்பும் ஆசியும்
இன்றி நாங்களோ என்புக் கூடுகள்
உன்னைப் பணிகிறோம் உனது பாதமே
தஞ்சமடைகிறோம் சரண் அடைகிறோம்

வேதம் அறிந்தநல் ஞானி முனிவர்கள்
நாதப் பொருளினை உணர்ந்து வாழ்ந்தனர்
நாமும் அவ்விதம் நயந்து வாழ்ந்திட
நன்மை புரிகுவாய் ஞானம் அருளுவாய்

வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பதும்
வீணை கையினில் ஏந்தி யிருப்பதும்
உள்ளத் தெளிவிலே ஒளியின் கீற்றிலே
கள்ளம் நீக்குவாய் காவல் செய்குவாய்!

(ஆங்கிலக் கவிதையொன்றின் தமிழாக்கம்)

# ஆன்மீகத் தெளிவு

கேள்வி: 'ஆன்மநேய ஒருமைப்பாடு காண்பது' என்றால் என்ன?

பதில்: மரம், செடி, கொடி, மனிதர், விலங்குகள், பறவைகள், மலை, மடு, வானம், பூமி என்று நமக்குக் காணப்படுவனவும் காணப்படாதனவுமாகிய அனைத்திலும் ஒரே ஆன்மாவே வியாபித்திருக்கிறது.

உடல்மிசை உயிரென இறைவன் எங்கும் கரந்தும் பரந்தும் விளங்குகிறான்.

திருவிளையாடல் புராணம் பிட்டுக்கு மண் சுமந்த படலம், இறைவன் மீது பட்ட அடி எல்லா உயிர்களின் மீதும் பட்டது என்று கூறுகிறது.

எல்லாச் சூழ்நிலைகளிலும், எல்லா இடங்களிலும், எல்லாக் காலங்களிலும், எல்லாவற்றிலும் இறைவனை அல்லது ஆன்மாவைக் காண்பது என்பதுதான் ஒருவர் வாழ்க்கையில் பெறக்கூடிய மகத்தான உயர்ந்த நிலையாகும்.

மனிதர்களில் மூன்று வகையினர் உள்ளனர். அவர்கள் முறையே தாழ்ந்தவர், நடுத்தரமானவர், உயர்ந்தவர் ஆவர்.

தாழ்ந்தவன் என்பவன், 'என்னைவிட உயர்ந்தவர்கள் வேறு யாரும் கிடையாது. நான்தான் பெரியவன், என்னைவிட மற்றவர்கள் மட்டமானவர்கள், மற்றவர்கள் எனக்குக் கீழானவர்கள்' என்று நினைக்கிறான்.


நடுத்தரமான மனிதன், 'என்னைவிட உயர்ந்தவன் யாரும் கிடையாது. என்னைவிடத் தாழ்ந்தவனும் யாரும் கிடையாது. எல்லோரும் ஒரே நிலையில்தான் இருக்கிறோம்' என்று எண்ணுகிறான்.

மூன்றாமவர்கள் உயர்ந்தவர்கள். இவர்கள் எல்லா மனிதர்களிடமும் ஆத்மா குடிகொண்டிருக்கிறது என்பதை அனுபவபூர்வமாக உணர்ந்தவர்கள். இவர்கள் மனிதனிடம் மட்டுமல்லாமல், எல்லா உயிர்களிடமும் ஆன்மா அல்லது இறைவன் கோயில் கொண்டிருப்பதைக் காண்கிறார்கள். ஆதலால் அவர்கள் எல்லா உயிர்களிடமும் ஆன்மாவைக் கண்டு போற்றுபவர்களாக இருக்கிறார்கள். இவர்களின் நிலையே ஆன்மநேய ஒருமைப்பாடு எனப்படும்.

— சுவாமி கமலாத்மானந்தர் —


ஆதாரம் - இராமகிருஷ்ண விஜயம்

## சிலம்பொலியின் சொற்பொழிவு



திணைக்களக் கேட்போர் கூடத்தில் தமிழக அறிஞர் சிலம்பொலி செல்லப்பன் அவர்கள் உரைநிகழ்த்துவதையும், கூடியிருந்த தமிழ் ஆர்வலர்களையும் படத்திற் காணலாம். அமைச்சின் செயலாளர் திரு. த. வாமதேவன். அமைச்சின் முன்னாள் செயலாளர் திரு. சிவஸ்ரீ. மாணிக்க வாசகர் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

## நவநீதகிருஷ்ணன் குழுவினர் நிகழ்ச்சி



திரு. திருமதி நவ நீதகிருஷ்ணன் தம்பதியினரின் இசை நிகழ்ச்சி இராமகிருஷ்ண மண்டபத்தில் நடைபெற்றபோது பிடிக்கப்பட்ட படம் தம்பதியினரின் நிகழ்ச்சிகளை இராஜாங்க அமைச்சர் பி பி தேவராஜ், திருமதி தேவராஜ் உட்பட பல பிரமுகர்கள் ரசிப்பதைப் படத்தில் காணலாம்

---

## அட்டைப்பட விளக்கம்

காளிங்கன் என்னும் நாகத்தின் தலைமீது தனது பாதங்களை வைத்து நர்த்தனமாடிய விஷ்ணு வடிவம். இச்சிலை, லண்டன் விக்டோரியா தொல்பொருட் காட்சிச்சாலையில் உள்ளது. (இண்டியன் மைதோலோஜி என்னும் நூலிலிருந்து)

# திணைக்கள வெளியீடுகள்

★ **Sri Lankan Culture** - ஆங்கிலக் கட்டுரைத் தொகுப்பு

இலங்கையில் பல்லின கலாசாரம் தொடர்பாக திணைக்களம் நடாத்திய கருத்தரங்கின் சொற்பொழிவுகளின் தொகுப்பான இந்நூலில் பேராசிரியர் ஏ. ஜே. குணவர்த்தன, செல்வி இராதிகா குமாரசாமி, திரு. ரெஜி சிறிவர்த்தன, பேராசிரியர் கே. என். ஓ. தர்மதாச, கலாநிதி ரஜீவ விஜேசிங்க, திரு. கே. எஸ். சிவகுமாரன் ஆகியோரின் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

விலை ரூ. **100/-**

★ **Lectures on Hinduism** - ஆங்கிலக் கட்டுரைத் தொகுப்பு

திணைக்களம் நடாத்திய இந்துப் பேருரைத் தொடர்களில் ஆங்கிலத்தில் இடம் பெற்ற எட்டு உரைகள் இந்நூலில் கட்டுரைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. திருமதி ரட்ன மா. நவரட்னம், கலாநிதி பொன். விக்னராஜா, பேராசிரியர் சீ. சூரிய குமாரன், திரு. என். மாணிக்க இடைக்காடர், திரு. வி. முருகேசு, கலாநிதி திருமதி மகேஸ்வரி அருட்செல்வம், திரு. சண்முகம் ஆறுமுகம் ஆகியோரது கட்டுரைகள் இத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன.

விலை ரூ. 75/-

★ தமிழ் இசை - தமிழிசை அரங்கு சொற்பொழிவுகள்

திணைக்களம் நடாத்திய தமிழிசை அரங்குகளில்இடம்பெற்ற விசேட சொற் பொழிவுகள் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. தமிழிசைபற்றிய திரு. எஸ். கே. பரராஜசிங்கம் அவர்களது உரையும், பாபநாசம் சிவன் பற்றிய டாக்டர் சாரதா நம்பி ஆரூரன் அவர்கள் உரையும், தமிழிசையும் நாட்டியமும் பற்றிய செல்வி சுபாஷினி பத்ம நாதனின் உரையும், முத்துத்தாண்டவர் பற்றிய ஸ்ரீமதி அருந்ததி ஸ்ரீரங்கநாதன் அவர்களின் உரையும் கட்டுரைகளாக்கப்பட்டுள்ளன.

விலை ரூ. **50/-**

★ பண்பாடு - பருவ இதழ்

திணைக்களத்தின் பருவ இதழ் 'பண்பாடு' 92 சித்திரை இதழ் வெளிவந்து விட்டது இவ்விதழில் கலாநிதி சோ. கிருஷ்ணராசா, செ. யோகராசா, பெ. சு. மணி, கே. எஸ். சிவகுமாரன் ஆகியோரின் கட்டுரைகளும் சாகித்திய விழா மொழிக் கருத்தரங்கு பற்றிய திட்ட அறிக்கை நூல் விமரிசனங்கள், புதிய தமிழ் அகராதி பற்றிய ஒரு அறிமுகம், செய்திகள் என்பன இடம்பெற்றுள்ளன.

விலை ரூ. 20/-

★ **Nectareous Sentences** - மணி மொழித் தொகுப்பு

ஸ்ரீமத் சுவாமி கங்காதரானந்தா அவர்களின் பொன்மொழிகள் அடங்கிய 'வஜனாமிர்தம்' என்னும் நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பு.

இந்நூல்களும், மேலும் இந்து சமய, தமிழ்த்துறை சார்ந்த நூல் களும் திணைக்களக் கருமபீடத்தில் விற்பனைக்குள்ளன. காரியாலய நாட்களில் காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை இவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

KUMARAN PRESS, COLOMBO-12.